


ISSN: 2582–5518

புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வியாழன் ❖ நவம்பர். 30, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 7 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 56 ❖ ரூ.10

### வெறுப்பு பேச்சு விவகாரத்தில் வழிகாட்டு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனரா? உச்ச நீதிமன்றம்

# நோட்டீஸ்

## தமிழகம், கேரளா, நாகாலாந்து, குஜராத் ஆகிய மாநில அரசுகள் பதிலளிக்க உத்தரவு

## வழக்கின் விசாரணை பிப்ரவரி 5 -ம் தேதிக்கு ஒத்திவைப்பு

புதுடெல்லி , நவ. 30–

**வெறுப்பு பேச்சுகளால் ஏற்படும் வன்முறையை கட்டுப்படுத்தும் நெறிமுறைகளை செயல்படுத்த நோடல் அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டார்களா, இல்லையா என்பது குறித்து தமிழகம், கேரளா, நாகாலாந்து, குஜராத் ஆகிய மாநில அரசுகள் பதிலளிக்க நோட்டீஸ் பிறப்பித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**



வெறுப்பு பேச்சினால் ஏற்படும் வன்முறைகளை தடுத்து, கட்டுப்படுத்தும் வகையில், பூனாவாலா வழக்கின் உச்ச நீதிமன்ற நெறிமுறைகளை அமல்படுத்த நோடல் அதிகாரிகளை நியமன செய்ய உத்தரவிட்ட விவகாரம் தொடர்பான மனுக்கள் நேற்று உச்ச நீதிமன்றநீதிபதிகள் சஞ்சீவ் கன்னா மற்றும் எஸ். வி.என்.பட்டி அமர்வில் விசாரணைக்கு வந்தன. அப்போது மத்திய அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல், “உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி, 28 மாநிலங்கள் நோடல் அதிகாரிகளை நியமித்துள்ளது. குஜராத், கேரளா, நாகாலாந்து, தமிழகம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் மத்திய அரசின் கடிதத்துக்கு பதிலளிக்கவில்லை. அவர்கள் நோடல் அதிகாரிகளை நியமனம் செய்தார்களா, இல்லையா என்பது தெரியவில்லை. மேலும், வெறுப்பு பேச்சு விவகாரம் தொடர்பாக அனைத்து மாநில அரசுகளுடன் மத்திய உள்துறை செயலர் ஆலோசனை நடத்த உள்ளதாக தெரிவித்தார். அப்போது மேற்கு வங்க அரசு வழக்கறிஞர், நோடல் அதிகாரி நியமனம் தொடர்பாக பதில் மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது” என்றார்.

இதையடுத்து இந்த வழக்கைவிசாரித்தநீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், “அனைத்து மாநிலங்களும் இந்த விவகாரத்தில் பதிலளிக்காமல், உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க இயலாது. 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் தவிர மற்ற மாநிலங்கள் ஏன் பதிலளிக்கவில்லை?” என்று கேள்வி எழுப்பினர். மேலும், வெறுப்பு பேச்சுகளால் ஏற்படும் வன்முறையை கட்டுப்படுத்தும் நெறிமுறைகளை செய்யல்படுத்த நோடல் அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டார்களா, இல்லையா என்பது குறித்து தமிழகம், கேரளா, நாகாலாந்து, குஜராத் ஆகிய மாநில அரசுகள் பதிலளிக்க நோட்டீஸ் பிறப்பித்துஉத்தரவிட்டனர். பின்னர் இந்த வழக்கின் விசாரணையைபிப்ரவரி5–ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

அப்போதுவழக்கறிஞர் அஜித் சார்பில் தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள்,இந்த விவகாரம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தை ஏன் நீங்கள் அணுகக் கூடாது? என கேள்வி எழுப்பினர். அதற்கு,நிலுவையில் உள்ள அமைச்சர் உதயநிதியின் வழக்கை சுட்டிக்காட்டி பதிலளித்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், “சனாதன விவகாரத்தில் ஏற்கெனவே நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. வெறுப்பைத் தூண்டும் வகையில், மாநில அமைச்சர் ஒருவர் பேசுவது ஏற்புடையதல்ல. எனவே, உடனடியாக நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.

இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிபதிகள், இந்த விவகாரத்தில், தற்போது எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது என மறுத்துவிட்டனர். மேலும், “தனிப்பட்ட நபர்களின் வழக்குகளை வெறுப்பு பேச்சு வழக்குடன் சேர்த்து விசாரிக்கத் தொடங்கினால், மேலும் பத்து, இருபது அவமதிப்பு வழக்குகள் தாக்கல் செய்யப்படும். இதனால், தினந்தோறும் இதுபோன்ற வழக்குகளை விசாரிக்க வேண்டிய நிலை வரும். இந்தியா முழுவதும் வெறுப்பு பேச்சுக்களால் ஏற்படும் வன்முறையை தடுக்கும் வகையில் நெறிமுறைகளை கொண்டுவர முயற்சித்து வருகிறோம். எனவே, தனிநபர் வழக்குகள் விசாரணைக்கு பட்டியலிடும் போது விசாரிக்கப்படும்" என்று தெரிவித்தனர்.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலிக்காட்சி வாயிலாக நேற்று பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டம் மருதன்கோண்விடுதியில் 100 மாணவர்கள் தங்கும் வகையில் ரூபாய் 2.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதியினை திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து மருதன்கோண்விடுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் கலந்து கொண்டு விடுதி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்தார். உடன் மாநிலங்களவை உறுப்பினர் எம்எம்.அப்துல்லா, கந்தர்வகோட்டை எம்எல்ஏ சின்னத்துரை, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயலட்சுமி, அறந்தாங்கி ஒன்றிய குழு தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அமீர் பாஷா, வெள்ளாள விடுதி ஊராட்சி மன்றத் தலைவர் பரமசிவம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

## அமைச்சர்கள் கே.என்.நேரு, ரகுபதி, ஐ.பெரியசாமி மீதான சொத்துக்குவிப்பு வழக்கு ரத்து – உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

புதுடில்லி, நவ. 30–

தமிழக அமைச்சர்கள் கே.என்.நேரு, ரகுபதி, ஐ.பெரியசாமி,முன்னாள் அமைச்சர்கள் கோ.சி. மணி, குழந்தைவேலு ஆகியோர் மீது தொடரப்பட்ட சொத்துக்குவிப்பு வழக்குகளை ரத்து செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



தமிழ்நாட்டில் 1996 முதல் 2001 ஆண்டுகளில் திமுக ஆட்சி நடைபெற்றது. இந்த காலகட்டத்தில், வருமானத்துக்கு அதிகமான சொத்து குவித்ததாக அடுத்து வந்த அதிமுக அரசு வழக்கு தொடர்ந்தது. அமைச்சர்கள் கே.என்.நேரு, ரகுபதி, ஐ.பெரியசாமி மற்றும் மறைந்த முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி ஆகியோர் மீது வழக்குகள் தொடரப்பட்டன.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற மதுரை கிளை, குற்றத்திற்கான எந்தவித ஆதாரமும் இல்லை என கூறி அனைவரையும் விடுதலை செய்து உத்தரவு பிறப்பித்தது. உயர் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை எதிர்த்து கடந்த 2009-ம் ஆண்டு ஆறுமுகம், கோவிந்தன் உள்ளிட்டோர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, ஏற்கெனவே உயர் நீதிமன்றம் இந்த விவகாரத்தை தீர ஆய்வு செய்து தீர்ப்பு அளித்துவிட்டது. மேலும் இந்த வழக்கு காலதாமதமானது எனக் கூறி நீதிபதிகள் பி.ஆர். கவாய் மற்றும் நரசிம்மா அடங்கிய அமர்வு வழக்கைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஜான்பாண்டியன் பிறந்த நாளை முன்னிட்டு மதுரையில் அன்னதானம்

மதுரை , நவ. 30–

மதுரையில் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் நிறுவனத் தலைவர் பெ.ஜான் பாண்டியனின் 68வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது ஆதரவாளர்கள் அன்னதானம் வழங்கி சிறப்பித்தனர்.



மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஒன்றியத்தின் சார்பாக மேலூரில் உள்ள சி.எஸ்.ஐ ஊனமுற்றோர் பள்ளிக்கு காலைஉணவுவழங்கப்பட்டது. இதில் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில கொள்கை பரப்பு செயலாளர் சிறுதூர் அ.சி. கோபாலகிருஷ்ணன், மாவட்ட செயலாளர் பாலாஜி,மாவட்ட தலைவர் கதிரேசன், மாவட்ட இளைஞரணி செயலாளர் கொட்டாம்பட்டி க.உ.ரஞ்சித் பாண்டியன், மேலூர் தொகுதி செயலாளர் ஆம்புலன்ஸ் ஹரி,கொட்டாம்பட்டி ஒன்றிய இளைஞரணி இணைச் செயலாளர் முத்துப்பாண்டியன்உள்பட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## எடப்பாடி பழனிசாமிக்கு எதிரான நெடுஞ்சாலைத்துறை முறைகேடு வழக்கு : உச்சநீதிமன்ற நீதிபதி அதிரடி உத்தரவு

டெல்லி, நவ. 30–

முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தொடர்புடைய நெடுஞ்சாலைத்துறை முறைகேடு புகாரில் லஞ்ச ஒழிப்புத் துறையின் மேல்முறையீடு மனுவை விசாரிக்கும் அமர்வு குறித்து முடிவெடுக்க உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நீதிபதிகள் பேலா எம். திரிவேதி தலைமையிலான அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

கடந்த 2016-2021ம் ஆண்டு அதிமுக ஆட்சியில் நெடுஞ்சாலை துறை இலாகாவை தன் வசம் வைத்திருந்த எடப்பாடி பழனிசாமி மீது ரூ.4,800 கோடி டெண்டர் முறைகேடு வழக்கை 2018-ல் திமுகவின் ஆர்.எஸ்.பாரதி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்தார்.

எடப்பாடி பழனிசாமி மீதான டெண்டர் முறைகேடு தொடர்பான புகாரை விசாரிக்க கோரிய ஆர்.எஸ். பாரதியின் மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதனை எதிர்த்து தமிழக அரசு சார்பில் லஞ்ச ஒழிப்புத்துறை உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தது. இந்த மனுவை கடந்த முறை நீதிபதி அனிருதா போஸ் தலைமையிலான அமர்வு விசாரித்திருந்தது. இரு தரப்பிலும் விசாரணையை தள்ளிவைக்க கோரிக்கை வைக்கப்பட்டதை தொடர்ந்து இறுதியாக விசாரிப்பதாக



தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் பேலா எம்.திரிவேதி தலைமையிலான அமர்வு முன் பட்டியலிடப்பட்டது.

விசாரணை தொடங்கிய உடனே தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறை சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் துஷார் மேத்தா, இந்த வழக்கு ஏற்கனவே 3 முறை அனிருதா போஸ் முன்பு விசாரணைக்கு வந்துள்ளது. இந்த மனு வேறு நீதிபதியிடம் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது உங்கள் முன் பட்டியலிடப்பட்டுள்ளது. எனவே இந்த மனுவை நீங்கள் விசாரிக்க கூடாது. மனுவை நீதிபதி அனிருதா போஸ் தலைமையிலான அமர்வு தான் விசாரிக்க வேண்டும் என வாதிட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த எடப்பாடி பழனிசாமி தரப்பு வழக்கறிஞர், நீதிபதி பேலா எம்.திரிவேதி அமர்வு முன் விசாரணை நடைபெற்றால் என்ன தவறு என்று ஆட்சேபம் தெரிவித்தார்.

கடந்த முறை கூடுதல் விசாரணை இல்லாமல் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என வாதிடப்பட்டது. இதனையடுத்து இந்த வழக்கை விசாரிக்கும் விசாரணை அமர்வை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியே முடிவு செய்வார் என நீதிபதி பேலா எம். திரிவேதி அறிவித்துள்ளார். மேலும் இது குறித்த தங்களது கோரிக்கைகளை தலைமை நீதிபதி முன்பு வைக்க தமிழக லஞ்ச ஒழிப்புத்துறை தரப்புக்கும் எடப்பாடி பழனிசாமி தரப்புக்கும் அறிவுறுத்தியுள்ளார்.



# இன்று

30-11-23



சங்கடஹர சதுர்த்தி

சக வருடம் 1945 மார்கழிஷம் 09

மிளகு இஞ்சி அரைத்து சாப்பிட அஜீரண கோளாறுகள் நீங்கும்

| | | |
|---|---|---|
| சோபகிருது கார்த்திகை 14 | NOV - THU வியாழன் | ஜமா.அத்துல் அவ்வல் 16 |
| | | தேய்பிறை 334 / 031 |

தேய். திரிதியை 23.10 (மா. 03.31) திருவாதிரை 25.53 (மா. 04.36) தியாஜ் 58.05 அகஸ் 28.40 மரண 25.53 மேல் அமிர்த. சங்கடஹர சதுர்த்தி. சுவாமிமலை ஸ்ரீமுருகப் பெருமான் தங்கக் கவசம் அணிந்து வைரவேல் தரிசனம். அரச் ஆன்ருஸ். சிறிய நகக.

| | நல்லநேரம் | கௌ.த.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 10.45-11.45 | 12.15-1.15 | 01.30 | 09.00 | 06.00 |
| மாலை | ---------- | 6.30-7.30 | 03.00 | 10.30 | 07.30 |

சூலம் : தெற்கு; பரிகாரம் : தைலம்; கரணம் : 3-4.30

விருச்சிக லக்னம் இருப்பு நா. 2 வி. 58; சூரிய உதயம் : 6.15

சந்திராஷ்டமம் : அனுஷம் கேட்டை

சின்ன மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடி

**இராசிபலன்**

- மேஷம் - அமைதி
- ரிஷபம் - வெற்றி
- மிதுனம் - எதிர்ப்பு
- கடகம் - மறதி
- சிம்மம் - நன்மை
- கன்னி - வரவு
- துலாம் - தடங்கல்
- விருச்சி - ஆதாயம்
- தனுசு - புகழ்
- மகரம் - ஊக்கம்
- கும்பம் - ஓய்வு
- மீனம் - சாதனை

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

என்னிடம் சிறப்பான
தனித்திறமை என்று
எதுவுமே இல்லை

என்னிடம் இருப்பது
ஆர்வம் மட்டுமே!






# புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளி மாணவர்கள் டேக்வாண்டோ மற்றும் குத்துச்சண்டைப் போட்டிகளில் மாவட்ட அளவில் சாதனை



புதுக்கோட்டை, நவ.30–

பள்ளிக்கல்வித் துறையின் சார்பாக மாவட்ட அளவிலான டேக்வாண்டோ மற்றும் குத்துச்சண்டைபோட்டிகள் நடத்தப்பட்டது. இப்போட்டியில்மாவட்டம் முழுவதிலிருந்தும் 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர், இந்த போட்டியில் திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியைச்சார்ந்த 20க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பல பரிசுகளை பெற்றுள்ளனர். மாவட்ட அளவில் வெற்றிப் பெற்று, மாநிலப் போட்டிக்கு தேர்வான மாணவர்களுக்கு பள்ளி வளாகத்தில் பாராட்டு விழா நடைபெற்றது. டேக்வாண்டோ போட்டிகளில் வெங்கடேஷன்-(முதல்பரிசு) தவபிரபு(இரண்டாம்பரிசு) பெற்றனர், குத்துச்சண்டை போட்டிகளில் தர்ஷன் முதல்பரிசு,ஹரிகிருஷ்ணன், ஹரிஸ்குமார் ஆகிய மாணவர்கள் மூன்றாம் இடங்களை பிடித்து பள்ளிக்கு பெருமை சேர்த்தனர்.

இவ்விழாவில் பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம்மூர்த்தி மாணவர்களை பாராட்டி நினைவுப் பரிசாக புத்தகங்களை வழங்கினார், அவர்கள் மென்மேலும் பல வெற்றிகளைப் பெற வாழ்த்துகள் கூறினார். வெற்றிப் பெற்ற மாணவர்களை துணை முதல்வர் குமாரவேல் உள்ளிட்ட ஆசிரியர்கள் பாராட்டினர். இந்நிகழ்வில் பள்ளியின் டேக்வாண்டோ பயிற்சியாளர் ஆகாஷ் மற்றும் குத்துச்சண்டை பயிற்சியாளர் மாஸ்டர் சேது.கார்த்திகேயன் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் நீலகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 6 மாதங்களுக்கு பின் பெரணி இல்லம் திறப்பு சுற்றுலா பயணிகள் செல்ல அனுமதி



ஊட்டி : நவ. 30, தாவரவியல் பூங்காவில் உள்ள பெரணி இல்லம் 6 மாதங்களுக்குபின்மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா நகரமான ஊட்டிக்கு நாள் தோறும் பல ஆயிரம் சுற்றுலா பயணிகள் வருகின்றனர். வெளி மாநிலங்கள் மற்றும் வெளியூர்களில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள் இங்குள்ள தாவரவியல் பூங்கா,ரோஜாபூங்கா,படகு இல்லம், தொட்டபெட்டா போன்ற சுற்றுலா தலங்களுக்குசெல்கின்றனர். குறிப்பாக, தாவரவியல் பூங்காவிற்கு அதிகளவு சுற்றுலா பயணிகள் செல்கின்றனர். இங்கு வரும் சுற்றுலாபயணிகளைகவரும் வகையில் தாவரவியல் பூங்காவில் பல்வேறு மலர் செடிகள்,பெரணிசெடிகள், கள்ளிச்செடிகள் மற்றும் மூலிகைதாவரங்கள்ஆகியன வைக்கப்பட்டள்ளன.

பெரணி மற்றும் கள்ளிச்செடிகள் நூற்றாண்டுபழமைவாய்ந்த கண்ணாடி மாளிகையில் வைக்கப்பட்டுள்ளன. இவைகள், அனைத்தும் ஆங்கிலேயர்ஆட்சிகாலத்தில் அமைக்கப்பட்டது.தற்போது இவைகள் வலுவிழந்த நிலையில், மேற்கூரையில் உள்ள கண்ணாடிகள் அவ்வப்போது கிழே விழுகின்றன. இதனால், சுற்றுலா பயணிகளுக்கு விபத்து அபாயம் ஏற்பட்டு வந்தது.இதனைத்தொடர்ந்து, கடந்த 6 மாதங்களுக்கு முன் தாவரவியல் பூங்காவில் உள்ள பெரணி இல்லம் மற்றும் கள்ளிச்செடிகள் வைக்கப்பட்டுள்ள கண்ணாடி மாளிகைகள் மூடப்பட்டன. பாதுகாப்பு கருதி சுற்றுலா பயணிகள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில், பழுதடைந்தகண்ணாடிகள் அகற்றப்பட்ட நிலையில், தற்போது பெரணி இல்லம் மட்டும் சுற்றுலா பயணிகள் பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளது. 6 மாதங்களுக்கு பின் ஊட்டி வரும் சுற்றுலா பயணிகள் இந்த பெரணி இல்லத்திற்குள் சென்று, அங்கு வைக்கப்பட்டுள்ள பல வகையான பெரணி செடிகளை கண்டு ரசித்து செல்வது மட்டுமின்றி, அதனை புகைப்படமும் எடுத்து செல்கின்றனர். எனினும், இந்த இரு கண்ணாடிமாளிகையையும் தோட்டக்கலைத் துறையினர் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுற்றுலா ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.








மதுரை மாட்டுத்தாவணி பழமண்டி வணிகவளாகம் பகுதியில், குளோபல் வீல்ஸ் புதிய கடையை தொழிலதிபர் எஸ்.வி.சூரஜ் சுந்தர சங்கர் (நிறுவனர் எஸ்விஎஸ் ஃபுன்ஸ்) குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். உடன் நிறுவன உரிமையாளர் கே.ஜி. ரமேஷ் - இந்துமதி, முக்கிய பிரமுகர்கள், என ஏராளனமானோர் கலந்துகொண்டனர்.



காரைக்கால் மாவட்டம் மேலவாஞ்சூர் அரசு தொடக்கப் பள்ளியில் நேற்று அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. இந்த கண்காட்சியில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு கண்காட்சியை துவங்கி வைத்து மாணவர்களின் படைப்புகளை பார்வையிட்டு அதன் பயன்பாட்டை மாணவர்களிடம் கேட்டறிந்தார். இந்நிகழ்ச்சியின் காரைக்கால் முதன்மை கல்வி அதிகாரி விஜயமோகனா , பள்ளி வட்ட ஆய்வாளர் பால்ராஜ் மற்றும் பள்ளி இருபால் ஆசிரியர்களும் மேலாண்மை குழு உறுப்பினர்களும், பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்களும் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். மாணவர்களின் சுமார் 200 அறிவியல் சார்ந்த படைப்புகள் கண்காட்சியாக வைக்கப்பட்டிருந்தன.

# திருப்பூரில் இளம்பெண்களை வைத்து விபச்சாரம் : 4 பேர் கைது



திருப்பூர், நவ. 30, திருப்பூரில் இளம்பெண்களை வைத்து விபசாரத்தில் ஈடுபட்ட 4 பேரை போலீஸார் கைது செய்தனர்.

திருப்பூர் தெற்கு போலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் இளம்பெண்களை வைத்து விபசாரம் நடத்துவதாக போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனையடுத்து, மாநகர போலீஸ் கமிஷனர் பிரவீன் குமார் அபிநபு இதுதொடர்பாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். உடனடியாக களத்தில் இறங்கிய தெற்கு காவல் நிலைய ஆய்வாளர் கணேசன் தலைமையில் போலீஸார் ரோந்து பணியை தீவிரப்படுத்தினர். அதோடு, கிடைத்த தகவலின் அடிப்படையில் முத்தமிழ் கலைஞர் பேருந்து நிறுத்தம் பின்புறம் உள்ள பகுதிகளில் அதிரடி சோதனை மேற்கொண்டனர்.

அங்கு ஒரு அடிக்குமாடி குடியிருப்பில் உள்ள வீட்டில் விபசாரம் நடப்பது உறுதி செய்யப்பட்டது. அங்கு விரைந்து சென்ற போலீஸார், அந்த வீட்டினுள் பார்த்தபோது, இரண்டு இளம் பெண்களை விபசாரத்தில் ஈடுபடுத்தியது தெரியவந்தது. இதனையடுத்து விபசார புரோக்கராக இருந்த மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த ஷாஜகான் (32), வாடிக்கையாளர்களாக சென்ற இளங்கோ (35), உதயகுமார் (23), முருகேசன் (37) ஆகிய 4 பேரையும் கைது செய்தனர். மேலும், விபசாரத்தில் ஈடுபடுத்தப்பட்ட 2 பெண்களையும் போலீஸார் காப்பகத்தில் ஒப்படைத்தனர். இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# நடிகர் விஜயகாந்த் உடல்நிலை சீராக இல்லை மியாட் மருத்துவமனை அறிக்கை



சென்னை : நவ. 30, நடிகர் விஜயகாந்த் உடல்நிலை, கடந்த 24 மணி நேரத்தில் சீரான நிலையில் இல்லாததால் அவருக்கு நுரையீரல் சிகிச்சைக்கான உதவி தேவைப்படுகிறது என்றும், இன்னும் 14 நாட்கள் மருத்துவமனையில் விஜயகாந்துக்கு மருத்துவமனையில் தொடர் சிகிச்சை தேவைப்படுகிறது என்று மியாட் மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுள்ளது தொண்டர்களை பதற்றமடைய செய்துள்ளது.

தேமுதிக தலைவர் விஜயகாந்த் நவம்பர் 18ம் தேதி இரவு உடல்நலக்குறைவு காரணமாக சென்னையில் உள்ள மியாட் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். வழக்கமான மருத்துவப் பரிசோதனைக்காக சென்றுள்ளதாக தேமுதிக தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நடிகர் விஜயகாந்துக்கு அவ்வப்போது செயற்கை சுவாசம் அளிக்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில், ''விஜயகாந்தின் உடல் நலத்தில் நல்ல முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் கடந்த 24 மணி நேரத்தில் அவரது உடல்நிலை சீரான நிலையில் இல்லாததால் அவருக்கு நுரையீரல் சிகிச்சைக்கான உதவி தேவைப்படுகிறது. அவர் விரைவில் பூரண உடல் நலம் பெறுவார் என்று நம்புகிறோம். அவருக்கு இன்னும் 14 நாட்கள் மருத்துவமனையில் தொடர் சிகிச்சை தேவைப்படுகிறது'' என்று மியாட் மருத்துவமனை நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிறுபான்மை மக்களின் பாதுகாவலர் பழனிசாமி அதிமுக கொறடா எஸ்.பி.வேலுமணி புகழாரம்



கோவை, நவ. 30–

சிறுபான்மையின மக்களின் பாதுகாவலர் கே.பழனிசாமிதான் என்பதில் மாற்றுக்கருத்தில்லை என, அதிமுக கொறடா எஸ்.பி. வேலுமணி பேசினார்.

கோவை கருமத்தம்பட்டியில் நேற்று முன்தினம்செவ்வாய்கிழமை நடந்தகிறிஸ்தவஅமைப்பின் முப்பெரும் விழாவில் அதிமுக கொறடாவும், முன்னாள்அமைச்சருமான எஸ்.பி.வேலுமணி பேசியதாவது: தமிழகத்தில் தற்போதைய தேவை ஆட்சி மாற்றம். முதல்வர் ஸ்டாலின், அமைச்சர் உதயநிதிஆகியோர்பல்வேறு வாக்குறுதிகளை தந்தனர்.

சிறுபான்மையின மக்களுக்கு என்றும் அம்மா வழியில் பாதுகாவலர் பழனிசாமி தான் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. பல திருச்சபை திறப்புக்கு காரணம் அவர்தான். முதலமைச்சராக இருந்தபோதும் எளிதாக மக்கள் அணுககூடியவராக செயல்பட்டார். அவர் தலைமையில்ஆட்சிஅமைய வேண்டும் என்று தான் கோவை மாவட்டத்தில் 10 அதிமுக எம்.எல்.ஏ-க்களை மக்கள் வாக்களித்து தேர்ந்தெடுத்துள்ளனர்.

கோவை மாவட்டத்தில் கடந்த 50 ஆண்டு காலம் இல்லாத வளர்ச்சியை பழனிசாமி தந்துள்ளார். மேம்பாலம், அத்திகடவு - அவிநாசி திட்டம், ஆட்சியர் அலுவலகம், புதிய கல்லூரிகள், தாலுகா அலுவலகம், அரசு மருத்துவமனையில் புதிய கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல் படுத்தியுள்ளார். இன்று முதல்வர் ஸ்டாலின் திறந்துவைக்கும்திட்டங்கள் பழனிசாமி தொடங்கி வைத்தது தான்.

கிறிஸ்தவ அமைப்பு சார்பில் நடத்தப்படும் பல பள்ளிகளுக்கு அனுமதி வழங்கினார். தற்போதைய ஆட்சியில்கோடிக்கணக்கில் லஞ்சம்கொடுக்கவேண்டும். பாஜக கூட்டணியில் இருந்து விலகியுள்ளோம். மக்களவை தேர்தலில் பழனிசாமி தலைமையில் பெரியகூட்டணிஅமையும். சட்டப்பேரவை தேர்தல் எப்போது நடந்தாலும் பழனிசாமிமுதலமைச்சராக பொறுப்பேற்பார்.

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது. கஞ்சா விற்பனை அதிகரித்துள்ளது. பெண்களுக்கு பாதுகாப்பில்லை. மக்களவை தேர்தலில் 40 தொகுதிகளிலும், சட்டப்பேரவை தேர்தலில் 200-க்கும் மேற்பட்ட இடங்களிலும் பழனிசாமி தலைமையிலான அதிமுக வெற்றி பெறும். அவர் பொறுப்பேற்ற பின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று எஸ்.பி.வேலுமணி பேசினார்.

# தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு கையடக்க கணினி வழங்க அரசு முடிவு



சென்னை, நவ. 30–

தமிழகத்தில் அரசு தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குகையடக்க கணினி வழங்க பள்ளிக் கல்வித்துறை முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் கல்வி தரத்தை மேம்படுத்த அரசு பல்வேறுநலத்திட்டங்களை அமல்படுத்தி இருக்கிறது. அந்தவகையில்ஆசிரியர்கள் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு கற்பிக்க பள்ளிக் கல்வித்துறை புதிய முடிவு செய்துள்ளது. முன்னதாக இதற்கு கணினி ஆய்வகம் உள்ளிட்ட திட்டங்கள் செய்யப்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வரிசையில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு கற்பித்தல் பணிக்காக கையடக்க கணினி (டேப்லெட்) வழங்க இருப்பதாக அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. இதில் முதற்கட்டமாக 79723 டேப்லெட்கள்கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள், பள்ளிக்கல்வித் துறை சார்பில் கோரப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு வரை இது போல சாதனங்கள் தமிழக அரசின் எல்காட் நிறுவனம் மூலம் கொள்முதல்செய்யப்படும். ஆனால், இந்த முறை வெளி நிறுவனங்களிடம் இருந்து கொள்முதல் செய்ய இருக்கிறது. இதன் மூலம் மாணவர்களின் கல்வித்திறன்மேம்படும்என எதிர்பார்க்கப்படுகிறது.

### சீனாவில் பரவும் நிமோனியா

# மத்திய அரசு அவசர கடிதம் எதிரொலி கண்காணிப்பை தீவிரப்படுத்திய 5 மாநிலங்கள்



புது டெல்லி : நவ. 30, சீனாவில் நிமோனியா தொற்று வேகமாகப் பரவிவருவதாக செய்தி வெளியான நிலையில், மத்திய அரசு மாநில அரசுகளுக்கு கடிதம் எழுதியிருந்தது. இதையடுத்து, மத்திய அரசின் உத்தரவுக்குப் பிறகு தமிழ்நாடு, கர்நாடகா, ராஜஸ்தான், உத்தராகண்ட், குஜராத் உள்ளிட்ட பலமாநிலங்கள் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளனர். தத்தம் மாநிலங்களில் மாவட்ட நிர்வாகங்கள் உஷார் நிலையில் இருக்கும்படி அறிவுறுத்தியுள்ளன.

கர்நாடகாவில், பருவகாலபுளூ வைரஸின் பாதிப்புகளை முன்னிட்டு மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது. அதில், "பருவகால காய்ச்சல் என்பது ஒரு தொற்று நோயாகும். இது பொதுவாக ஐந்து முதல் ஏழு நாட்கள் நீடிக்கும். இதனால், குறைவான இறப்பு விகிதங்களே உள்ளன என அறியப்படுகிறது. இருப்பினும் குழந்தைகள், முதியவர்கள்,கர்ப்பிணிகள் உள்ளிட்டோருக்கும், ஸ்டீராய்டுகள் போன்ற நீண்டகால மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்வோருக்கு அதிக பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். இதனால்,காய்ச்சல்,குளிர், உடல்சோர்வு,பசியின்மை , குமட்டல் உள்ளிட்ட அறிகுறிகள் காணப்படும். அதிக பாதிப்பு நிலையில் உள்ளவர்களுக்கு 3 வாரங்கள் வரை வறட்டு இருமலும் காணப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்ராஜஸ்தானின் மருத்துவமற்றும்சுகாதாரத் துறை அதன் ஊழியர்களை விழிப்புடன் இருக்க அறிவுறுத்தியுள்ளது. ராஜஸ்தான் சுகாதாரத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரா சிங், காணொலி மூலம் அதிகாரிகளிடம் பேசுகையில், "தற்போது நிலைமைகவலைக்கிடமாக இல்லை, ஆனால் மருத்துவ ஊழியர்கள் மாநிலம் முழுவதும் கண்காணிப்புடன் செயல்பட வேண்டும். மேலும் தொற்று நோய்களைத் தடுக்க முழு விழிப்புடன் பணியாற்ற வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

உத்தரகாண்ட் சுகாதார செயலாளர் டாக்டர் ராஜேஷ்குமார் இது தொடர்பான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளார். குழந்தைகளுக்கு ஏற்படும் நிமோனியா மற்றும் காய்ச்சல் அறிகுறிகளைக் கண்காணிக்குமாறு மருத்துவக் குழுக்களைக் கேட்டுக்கொண்டார். குஜராத் அரசும் இது தொடர்பாக ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டது, அதில் அனைத்து மருத்துவமனைகளும் உஷார் நிலையில் இருக்க உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழ்நாடுபொதுசுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குனர், மாநிலத்தில் சுவாச நோய்களுக்கான கண்காணிப்பை தீவிரப்படுத்துமாறு சுகாதாரத்துறைக்கு எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

சீனாவில் பரவி வரும் நிமோனியா காய்ச்சல் அதிக பாதிப்புகளை உருவாக்கிவருவதையடுத்து இரண்டு நாட்களுக்கு முன்பு, மாநில, யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய அரசு அவசர ஆலோசனை கடிதத்தை எழுதியது. மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது : சீனாவில் பரவி வரும் நிமோனியா வைரஸ் அதிக பாதிப்புகளை உருவாக்கி வருகிறது. குறிப்பாக, இந்த வகை வைரஸ் அதிகளவில் குழந்தைகளிடம் சுவாசப் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாக கூறப்படுகிறது. இதையடுத்து, சீனாவில் பொது சுகாதார நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.

இதனைஉணர்ந்துமாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள்முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முடுக்கி விட வேண்டும். பொது சுகாதார உள்கட்டமைப்பு வசதிகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். குறிப்பாக, மருந்துகள், ஆக்சிஜன்உள்ளிட்டவற்றை போதுமான அளவில் கையிருப்பில் வைத்திருக்க வேண்டும். நிமோனியா காய்ச்சல் காரணமாக கடுமையான சுவாசப் பிரச்சினைகளுக்கு ஆளாவோரை கண்டறிந்து தேவையான சிகிச்சைகளை அளிக்க மாவட்ட மற்றும் மாநில கண்காணிப்பு குழுக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

# சங்கரன்கோவிலில் மழையால் சேதமான பெரிய குளத்தை வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ ஆய்வு



சங்கரன்கோவில், நவ.30–

சங்கரன்கோவில் ஒன்றியம்ஆட்கொண்டார் குளத்தில் உள்ளது பெரியகுளம். கடந்த சில தினங்களுக்கு முன்பு பெய்த கனமழையால் பெரிய குளத்தின் மடை உடைந்து தண்ணீர் வீணாக வெளியேறி ஊருக்குள் செல்லும் நிலை இருந்தது, இதனால் விவசாயத்திற்கான தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் பெரிய குளத்தை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ, சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலா சங்கர பாண்டியன் ஆகியோர் ஆய்வு செய்தனர், தொடர்ந்து குளத்தை சரி செய்யும் பணியை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள ஏற்பாடு செய்தனர், தொடர்ந்து மணல் மூட்டைகளைக் கொண்டு மடையை சரி செய்யும் படி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் போது கிளைச் செயலாளர் பழனிச்சாமி, பஞ்சாயத்து தலைவர் பாக்கியம், பஞ்சாயத்து செயலாளர் கருப்பசாமி, மாவட்ட மாணவரணி செயலாளர் உதயகுமார் மற்றும் கிராம மக்கள் உடன் இருந்தனர்.

# சென்னையில் மாநகர பேருந்தை இயக்கிய மனநலம் பாதித்த வாலிபர், அலறிய பயணிகள்

பாரிமுனை, நவ,30

சென்னை வண்டலூரில் இருந்து பிராட்வே பேருந்து நிலையத்துக்கு நேற்று மாநகர பேருந்து 21ஜி வந்தது. பேருந்து ஓட்டுநர் இளங்கோவனும், நடத்துனர் கோவிந்தராஜனும் நேரக் காப்பாளரிடம் பதிவு புத்தகத்தில் எழுதுவதற்காக சென்றனர். அப்போது ஓட்டுநர் இளங்கோவன் பேருந்திலேயே சாவியை விட்டு சென்று உள்ளார்.



அப்போது அங்கு சுற்றிக் கொண்டிருந்த மனநலம் பாதிக்கப்பட்ட சுமார் 25 வயது மதிக்கத்தக்க வாலிபர் ஒருவர் திடீரென பேருந்துக்குள் சென்று ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்து பேருந்தை இயக்கினார். இதை பார்த்து அதிர்ச்சியடைந்த பயணிகள் அலறினர். பேருந்து பிளாட்பாரத்தின் இரும்பு கம்பத்தில் இடித்து பேருந்து நின்றது.

அதனை தொடர்ந்து, பேருந்து ஓட்டுநரும், நடத்துநரும் பதறியடித்து ஓடி வந்தனர். மனநலம் பாதிக்கப்பட்டவரை பிடித்து எஸ்பிளனேடு காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். இதையடுத்து போலீசார் அவரை கீழ்பாக்கம் மன நல காப்பகத்தில் சேர்த்தனர். மாநகர் போக்குவரத்து கழக அதிகாரிகள் இந்த சம்பவம் தொடர்பாக துறைரீதியிலான விசாரணையை நடத்தி வருகின்றனர்.



தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுரேஷ்குமார், மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் பத்மாவதி ஆகியோர் உடன் இருந்தனர்.

# உலக பிரசித்திபெற்ற 300 ஆண்டுகள் பழமை வாய்ந்த வேப்பமரம் கோவில் கோபுரத்தின் மீது சாய்ந்தது

செய்யூர்,நவ,30

செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் வட்டதிற்கு உட்பட்ட கல்குளம் ஊராட்சியில் 300 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த அருள்மிகு மாரி முத்தாலம்மன் ஆலயம் அமைந்துள்ளது.



இந்த திருக்கோவில் தமிழ்நாடு இந்து அறநிலைத்துறை கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது இந்த திருக்கோவிலை சுற்றி உள்ள கிராமங்களில் இருந்தும் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வந்து செல்வது வழக்கம் திருக்கோவிலில் அதிசயம் நிறைந்த நான்கு முகம் கொண்ட தலவிருட்சம் வேப்பமரம் உள்ளது வேறு எங்கும் இல்லாத இந்த வேப்பமரம் இப்பகுதியில் மட்டுமே அமைந்துள்ளது.

இதனை பக்தர்களும் பொதுமக்களும் நேரில் கண்டு வணங்கிசெல்வது வழக்கம் 300 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த மரம் தற்போது பெய்து வரும் மழையின் காரணமாக ஒரு கிளை முறிந்து கோபுரத்தின் மீது சாய்ந்தது இதனை தொடர்ந்து ஊராட்சிமன்ற தலைவர் மலர் ரமேஷ் மற்றும் இந்து அறநிலையதுறை உதவி ஆணையர் அவர்களில் வழிகாட்டுதலின் பெயரில் செய்யூர் ஆய்வாளர் சிவலிங்கம் பார்வையிட்டு சிறு கிளைகளை அகற்றினர்.

எனினும் இதனை மனிதர்கள் அகற்றுவது என்பது இயலாத காரியம் எனவே மாவட்ட வருவாய்த்துறை கவனத்தில் எடுத்து இந்த கிளையினை அகற்ற தீயணைப்புத் துறையின் உதவியோடும் ராட்சச கிரேன் மூலமாகவும் அகற்ற வேண்டும் என்று பொதுமக்களும் மற்றும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை வைத்துள்ளனர் கோபுரத்திற்கு எந்த ஒரு சேதமும் ஏற்படாதவாறு இதனை செய்ய வேண்டும் என்று மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



மக்களை நாடி அரசு அதிகாரிகள் செல்லும் சூழலை ஏற்படுத்தி உள்ளோம் என்று பேசினார். நிகழ்ச்சியில் ஆட்சியர் சுவேதா சுமன் பேரூராட்சித் தலைவர் கனேசமூர்த்தி, கல்விக்குழு உறுப்பினர் முத்துசாமி,ஒன்றிய குழுத் தலைவர் சக்தியாபர்வீன் நிஜார், மாவட்ட உதவி மக்கள் தொடர்பு அதிகாரி பாலமுருகன் , தமிழ்நாடு பனை வாரிய உறுப்பினர் அக்ரி பசுமைவலன் துணை தாசில்தார்கள் பிரகாஷ், சங்கர் ,வட்ட வழங்கல் அன்புராஜ், வருவாய் ஆய்வாளர்கள் தென்னரசு, சீனிவாசன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர். தாசில்தார் தமிழ்ச்செல்வன் நன்றி கூறினார். இதற்கு முன்னதாக அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் ராஜேந்திர சோழகன் கிராமத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக சேமிப்பு கிடங்கின் வளாகத்தில் தேங்கியுள்ள தண்ணீரை அப்புறப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆய்வு செய்து உத்தரவிட்டனர்.

# சென்னையில் வருமான வரி மற்றும் அமலாக்கத்துறையினர் திடீர் சோதனை

சென்னை,நவ,30

சென்னையில் வருமான வரித்துறை அதிகாரிகள் மற்றும் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் ரசாயன ஆலை அலுவலகத்தில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்திவருகின்றனர். மேலும் இந்த ஆலைக்குச் சொந்தமான பல்வேறு இடங்களிலும் வருமான வரித்துறையினர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். வரி ஏய்ப்பு புகார் காரணமாக நேற்று அதிகாலை முதல் இந்த சோதனை நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது.

மேலும் புரசைவாக்கம் கிளெமெண்ஸ்சாலையில்உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் அமலாக்கத்துறை அதிகாரிகளும் சோதனை நடத்தி வருகின்றனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.



பாட்டாளி மக்கள் கட்சியின் மயிலாடுதுறை நகர செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள ராஜ்குமார் பெரியசாமி, அக்கட்சியின் நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் சந்தித்து வாழ்த்து பெற்றார்.



புதுச்சேரி அரசு காரைக்கால் மாவட்ட நிர்வாகம் மற்றும் புதுச்சேரி நலவழித்துறையும் இணைந்து காரைக்காலில் அமைந்துள்ள அரசு பொது மருத்துவமனையில் 18-வயதிற்கு உட்பட்டவர்களுக்கு நேற்று காலை 9.00 மணி முதல் 2.00 மணி வரை ஒரு நாள் இலவச இருதய நோய் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இம்முகாமினை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் துவக்கி வைத்தார். இம்முகாமில் 70-க்கும் மேற்பட்ட காரைக்கால் வாழ் பொதுமக்கள் கலந்து கொண்டு சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளை பெற்றார்கள். இதில் 12-வயதுக்கு உட்பட்டவர்கள் 53- பேரும் 13-வயதிலிருந்து 18-வயதுக்கு உட்பட்டவர்கள் 17 பேரும் சிகிச்சை பெற்றார்கள். இதில் 12 வயதிற்கு உட்பட்டவர்கள் ஆறு பேரும் 13 வயதில் இருந்து 18 வயதிற்கு உட்பட்ட ஒருவரும் ஆக மொத்தம் ஏழு பேரும் மேல் சிகிச்சைக்காக இவர்கள் அப்போலோ தனியார் மருத்துமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவார்கள் என நல வழித்துறை துணை இயக்குனர் சிவராஜ்குமார் தெரிவித்தார். இந்நிகழ்வில் மருத்துவ கண்காணிப்பாளர் கண்ணகி மற்றும் உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் மருத்துவர்கள் உடனிருந்தனர்.

# ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் போதை பொருள் ஒழிப்பு மற்றும் யோகா நிகழ்ச்சி

திருவள்ளூர், நவ. 30 –

திருவள்ளூர், பெருமாள் பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் உலக சமுதாய சேவா சங்கம் (திருவள்ளூர் அறக்கட்டளை) சார்பில் யோகா பயிற்சி மற்றும் போதை பொருள் ஒழிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியின் முதலாவதாக சங்கத்தின் செயலாளர் லீலாவதி பேசியதாவது, ஆரோக்கியமான வாழ்க்கைக்கு யோகா மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது. யோகா செய்வதால் நமக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன. குறிப்பாக சர்க்கரை நோய், மலச்சிக்கல் போன்ற நோய்களை எதிர்த்துப் போராடவும் யோகா உதவுகிறது. மன அமைதி மற்றும் சிறந்த ஆரோக்கியத்திற்கு யோகா மற்றும் தியானம் அவசியம் என்று கூறினார்.

மேலும், உடலை நெகிழ வைப்பதற்காக மட்டுமே யோகா செய்யப்படுகிறது என்று பெரும்பாலும் மக்கள் நினைக்கிறார்கள், மாறாக, யோகாவின் பல ஆசனங்கள் நமக்கு பல நன்மைகளை அளிக்கின்றன. யோகாவின் உதவியுடன், நீங்கள் உங்கள் வாழ்நாள் முழுவதும் இளமையாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க முடியும் என பேசினார்.

அடுத்ததாக சங்கத்தின் ஆலோசகர் யோகாவின் நன்மைகள் குறித்து பேசியதாவது, தூக்கமின்மை, செரிமான குறைபாடு போன்றவற்றை நீக்குகிறது எனவும், மேலும் யோகா செய்வதன் மூலம், உடலுடன் சேர்ந்து, மனமும் ஆன்மாவும் ஆரோக்கியமாக இருக்கிறது எனவும் பேசினார். தொடர்ந்து மாணவ, மாணவியர்களுக்கு யோகா குறித்து செயல் விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்நிகழச்சியில் பேராசிரியர்கள் மாணவர்களை ஒருங்கிணைத்தது மட்டுமல்லாமல் அவர்களும் யோகா பயிற்சியில் ஈடுபட்டனர். மேலும் இந்நிகழ்ச்சியில், செவ்வாய் பேட்டை துணை ஆய்வாளர் குமரவேல் தலைமையில் அனைவரும் போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

அதன்படி, ”போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாக மாட்டேன், மேலும், எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகள் வழங்குவேன், போதைப் பழக்கத்திற்குள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன். போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணைநிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்” என துணை ஆய்வாளர் உறுதிமொழி வாசிக்க அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

# அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆய்வக உதவியாளர்களுக்கு விருப்ப மாறுதல் கலந்தாய்வு

புதுக்கோட்டை, நவ, 30,

புதுக்கோட்டை வருவாய் மாவட்ட கல்வித்துறையில் பணிபுரியும் ஆய்வக உதவியாளர்களுக்கு பொது மாறுதல் கலந்தாய்வு புதுக்கோட்டை முதன்மைக்கல்வி அலுவலக தேர்வுக்கூட அரங்கில் நடைபெற்றது.



புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆய்வக உதவியாளர்களில் 53 ஆய்வக உதவியாளர்கள் விருப்பமாறுதல் கேட்டு விண்ணப்பித்ததில் 21 ஆய்வக உதவியாளர்கள் விருப்ப மாறுதல் மூலம் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளை தேர்வு செய்தனர். அதனைத்தொடர்ந்து விருப்பமாறுதல் பெற்ற 21 ஆய்வக உதவியாளர்களுக்கும் விருப்ப மாறுதல் ஆணையினை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மா.மஞ்சுளா வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்கள் முருகையன், ராஜு, மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர்சாலை செந்தில், பள்ளித்துணை ஆய்வாளர்கள்வேலுச்சாமி, குரு.மாரிமுத்து, கண்காணிப்பாளர்கள் சங்கரநாராயணன், கார்த்திக்கேயன், பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் சீனிவாசன், உதவியாளர்கள் ராஜ்மோகன், முகமதுகனி, இளநிலை உதவியாளர் பிரசன்னகார்த்திக் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# வேலூரில் மாநில அளவிலான சதுரங்க போட்டி மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் பங்கேற்பு

வேலூர் நவ.30–

பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் வேலூர் விஐடி பல்கலைக்கழக அண்ணா அரங்கில் நடைபெற்ற மாநில அளவிலான சதுரங்க போட்டிகளை வேலூர் மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.



இந்த மாநில அளவிலான சதுரங்க போட்டியில் பல்வேறு இடங்களில் இருந்தும் வந்துள்ள ஏராளமான மாணவ ,மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டுள்ளனர். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் ப.கார்த்திகேயன். வி. அமுலு விஜயன், மாவட்ட வருவாய் அலுவலர் த. மாலதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் க. ஆர்த்தி, முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி. மண்டல குழுத் தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, மாமன்ற உறுப்பினர் விமலா சீனிவாசன், முதன்மை உடற்கல்வி ஆய்வாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# செம்பனார்கோவில் கலைமகள் கல்லூரியில் கலைஞர் நூற்றாண்டு விழாவின் சட்டமன்ற நாயகர் கருத்தரங்கு

செம்பனார்கோவில், நவ-30:

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் கலைமகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற "சட்டமன்ற நாயகர் கலைஞர்" கருத்தரங்கில் பங்கேற்ற கல்லூரி மாணவிகளுக்கு பங்கேற்பு சான்றிதழ்களையும், முதல் ஐந்து இடங்களை பிடித்த மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களையும், பரிசுகளையும் அரசு தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன் வழங்கினார்.



கருத்தரங்க கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செ.இராமலிங்கம் அவர்கள், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், குத்தாலம் ஒன்றிய குழு தலைவர் மகேந்திரன், கலைமகள் கல்விக் குழும தாளாளர் குடியரசு, தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன், சீர்காழி மண்டல துணை வட்டாட்சியர் பாபு திமுக ஒன்றிய செயலாளர்கள் எம் அப்துல் மாலிக் அமுர்த. விஜயகுமார் உள்ளிட்டர் உடன் இருந்தனர்.

# சேத்துப்பாக்கம் ஊராட்சிக்கு வேல்ஸ் மருத்துவக்கல்லூரி சார்பில் இலவச மருத்துவ சேவைக்கான பேருந்து இயக்கி வைக்கப்பட்டது



ஊத்துக்கோட்டை, நவ30–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், சேத்துப்பாக்கம் ஊராட்சியைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களுக்கான மருத்துவ சேவைக்கு திருவள்ளூரில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும், பெரியபாளையத்தில் உள்ள வட்டார மேம்படுத்தப்பட்ட மருத்துவமனைக்கும் செல்ல வேண்டும்.

இதற்காக இவர்கள் பல கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று அகரம் கூட்டிச்சாலை மற்றும் தாமரைப்பாக்கம் கூட்டுச்சாலை உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்வர். பின்னர், அங்கிருந்து பேருந்து மூலம் மருத்துவமனைக்கு சென்று வருகின்றனர்.

இந்நிலையில்,இப்பகுதி மக்களுக்கு மருத்துவ சேவை வழங்க எல்லாபுரம் ஒன்றியம், மஞ்சங்காரணையில் இயங்கி வரும் வேல்ஸ் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை நிர்வாகம் முன் வந்தது. எனவே, நாள்தோறும் காலை 9 மணிக்கு சேத்துப்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகே இருந்து புறப்பட்டு பாஷிகாபுரம்,தண்டுமேடு, பெருமுடிவாக்கம், பூரிவாக்கம், நெய்வேலி, கன்னிகைப்பேர் வழியாக மஞ்சங்காரணைக்கு இந்த இலவச பேருந்து சென்றடையும்.மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொண்டு நோயாளிகளை ஏற்றிக் கொண்டு மீண்டும் மதியம் 1.30 மணிக்கு மஞ்சங்காரணை மருத்துவமனையில்இருந்து புறப்பட்டு சேத்துப்பாக்கம் ஊராட்சிக்கு வந்து சேரும்.

இந்நிலையில், நேற்று முதல் இயக்கப்படும் இந்த பேருந்து சேவையை இயக்கி வைக்கும் நிகழ்ச்சி சேத்துப்பாக்கம் ஊராட்சிமன்ற அலுவலக வளாகம் அருகே நேற்று காலை நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, ஊராட்சிமன்ற தலைவர் முரளி தலைமை தாங்கினார். ஒன்றிய குழு உறுப்பினர் தட்சிணாமூர்த்தி, ஊராட்சிமன்ற துணை தலைவர் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேல்ஸ் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையின் தலைமைநிர்வாகஅதிகாரி ஹரிகிருஷ்ணபாபு கொடியசைத்து இவ்வழித்தடத்தில் இலவச பேருந்து சேவையை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஆர்.எம்.ஓ டாக்டர் அழகவேல், துணை கண்காணிப்பாளர் டாக்டர் சதீஷ்தேவ் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், மகளிர் உதவி குழுவினர்,கிராம பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.முன்னதாக அனைவரையும் செவிலியர் சந்தியா வரவேற்றார். முடிவில், மார்க்கெட்டிங்மேனேஜர் ஜானகிராமன் நன்றி கூறினார்.



புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகத்தில், பள்ளிக்கல்வித்துறை சார்பில் காலாண்டு தேர்வில் 10 - 12-ஆம் வகுப்பில் தேர்ச்சி சதவீதம் குறைந்த பள்ளிகளின் தேர்ச்சி பகுப்பாய்வு குறித்த தலைமையாசிரியர்கள், விடுதிக்காப்பாளர்களுக்கான மீளாய்வுக் கூட்டம் கலெக்டர் மெர்சி ரம்யா தலைமையில் நேற்று நடைபெற்றது. உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மஞ்சுளா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஸ்ரீதர், மாவட்ட கல்வி அலுவலர் அறந்தாங்கி ராஜேஸ்வரி, புதுக்கோட்டை மாவட்ட கல்வி அலுவலர் ரமேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# ஆலங்குடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி 2 மாணவிகள் மாநில அளவிலான கலைத் திருவிழாவில் முதலிடம்

ஆலங்குடி,நவ.30-

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 2 மாணவிகள் மாநில அளவிலான கலைத் திருவிழாவில் கலந்துகொண்டு முதலிடம் பிடித்துள்ளனர்.



தமிழகம் முழுவதும் பள்ளிகளில் ஒன்றிய மற்றும் மாவட்ட அளவில்33 வகையான போட்டிகளை உள்ளடக்கிய கலைத்திருவிழா நடத்தப்பட்டது. அதில், வெற்றி பெற்றமாணவமாணவிகளுக்கு வேலூரில் அண்மையில் விழா நடைபெற்றது. அதில், புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 8-ம் வகுப்பு பயிலும் மாணவி ஆர்.தர்ஷனா 6 முதல் 8-ம் வகுப்புகளுக்கு இடையேயான செவ்வியல் நடன போட்டியில் வெற்றி பெற்று முதலிடம் பிடித்துள்ளார்.

இதேபோன்று, அதே பள்ளியில் படிக்கும் என். தனவர்த்தனா தோல் இசைக் கருவி இசைக்கும் போட்டியில் வெற்றி பெற்று முதலிடம் பிடித்துள்ளார். கலைத் திருவிழாவில் மாநில அளவில் முதலிடம் பிடித்த ஒரே பள்ளியைச் சேர்ந்த தர்ஷனா, தனவர்த்தனா ஆகிய இருவரையும் சுற்றுச்சூழல் காலநிலைமாற்றத்துறை அமைச்சர்சிவ.வீ.மெய்யநாதன் சால்வை அணிவித்து பாராட்டினார்.

## அறந்தாங்கியில் வருவாய் வட்டாட்சியர் தலைமையில்

# குளத்தில் உள்ள புறம்போக்கு ஆக்கிரமிப்புகளை அகற்ற நில அளவை செய்யும் பணி தீவிரம்

அறந்தாங்கி, நவ.30-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் மாவட்ட ஆட்சியர் உத்தரவின் படி அறந்தாங்கி தாலுகாவிற்குட்பட்ட ரெத்தினக்கோட்டை வருவாய் கிராமம் வண்ணான்குளக்கரையில் உள்ள புறம்போக்கு ஆக்கிரமிப்புகளை அகற்ற உள்ளதால் குளத்தின் மொத்த நிலப்பரப்பில் நில அளவை செய்யும் பணியினை அறந்தாங்கி வட்டாட்சியர் ஜபருல்லா தலைமையில் நில அளவையினர் மற்றும் வருவாய்துறை அதிகாரிகளால் நில அளவை செய்யும் பணிகள் நடைபெற்றது.



அப்பகுதியில் வணிக கட்டிடங்கள் அதிகம் இருப்பதால் அளவு செய்யும்போது 20-க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர், நிலஅளவை பணி முடிந்தவுடன் நீர்நிலை புறம்போக்கு இடங்களை ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ள ஆக்கிரமிப்பாளர்கள் தாங்களாகவே ஒரு சில தினங்களில்

அகற்றிக்கொள்ள வேண்டும் எனவும் இல்லையென்றால் அதிகாரிகள் தலைமையில் அதிரடியாக ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என வருவாய்துறை அதிகாரிகள் தெரிவித்தனர், மேற்படி நில அளவைப் பணியில் மண்டல துணை வட்டாட்சியர் பாலமுருகன் தலைமை நில அளவர் செல்வராஜ் வருவாய் ஆய்வாளர் மதியழகன்,சரக நில அளவர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மௌண்ட் சீயோன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் "பயிற்சியாளர்களுக்கான பயிற்சி" STEM பயிற்சி பட்டறை

புதுக்கோட்டை , நவ.30-

தமிழ்நாடு அரசு, பள்ளிக் கல்வித் துறை, மாவட்டக் கல்வி அலுவலகம் (தனியார் பள்ளிகள்) சார்பில் அறிவியல் ஆசிரியர்களுக்கான "பயிற்சியாளர்களுக்கான பயிற்சி"-STEM பயிற்சிபட்டறை புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.




இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை தனியார் பள்ளிகளின் மாவட்டக்கல்வி அலுவலர் அறவழிவரவேற்புரை வழங்கினார். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மஞ்சுளா கலந்து கொண்டு நிகழ்ச்சியைக் குறித்து பாராட்டி பேசினார். புகழ்பெற்ற அணு ஆராய்ச்சி விஞ்ஞானி டாக்டர் டேனியல் செல்லப்பா கற்பித்தலில் அறிவியலைப் பயன்படுத்துவதற்கான புதுமையான முறைகளை ஆசிரியர்களுக்குப் பயிற்றுவித்தார்.மாணவர்களுக்கு கற்பிக்கப்படுவதைப் புரிந்து கொள்ளவும், ஆர்வத்துடன் அறிவியலைக் கற்கவும், போட்டித் தேர்வுகளை எளிதாகவும் நம்பிக்கையுடனும் எதிர்கொள்ளவும் உதவும் வகையில் மாணவர்களுக்கு எளிய முறையில் பயிற்சி அளிக்கும் வகையில் பல சோதனைகளை ஆசிரியர்களுக்கு அவர் செய்து காட்டினார்.

இந்தப் பயிலரங்கில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பல்வேறு தனியார் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தங்கள் பாடம்தொடர்பான வினாக்களை அணு ஆராய்ச்சி விஞ்ஞானி டாக்டர் டேனியல் செல்லப்பா அவர்களிடம் கேட்டறிந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் நிறைவாக மௌண்ட் சீயோன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் நிர்வாக முதல்வர் கிருபா ஜெபராஜ் நன்றியுரை வழங்கினார்.



புதுக்கோட்டை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி (வடக்கு)சார்பில் நகர காங்கிரஸ் கமிட்டியின் தேர்தல் (பூத் கமிட்டி) முகவர்கள் நியமன பட்டியலை நேற்று மாவட்ட தலைவர் முருகேசன் நகர காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் மதன் கண்ணனிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் பொதுச்செயலாளர் பெனட்அந்தோணிராஜ், மாநில பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் சந்திரசேகரன், மாவட்ட துணை தலைவர்கள் வேங்கை அருணாசலம், தீன், வட்டார காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் சூர்யா பழனியப்பன், மாவட்ட ஓபிசி அணியின் தலைவர் வீர. துரைசிங்கம், முன்னாள் நகர தலைவர் மேப் வீரையா, நகர தலைவர் பாருக், ஜெய்லானி ஆகியோர் கலந்து கொண்டனர்.



தென்காசி பாராளுமன்ற பொறுப்பாளராக பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை. மக்கள் சேவகர் ஸ்டார்ட் அப் பிரிவு மாநில ஒருங்கிணைப்பாளர் தென்காசி ஆனந்தன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவருக்குமாநில, மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள், தொண்டர்கள், மக்கள் பிரதிநிதிகள், தொழிலதிபர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.



புதுக்கோட்டை மாவட்டம் அரிமளத்தில் த.மா.கா 10 ஆம் ஆண்டு துவக்க விழா பேரூராட்சி அலுவலகம் முன்பாக அமைந்துள்ள த.மா.கா. கொடி கம்பத்தில் மாநில சிறப்பு அழைப்பாளர், மாநில வருத்தக சங்க துணை தலைவர் மற்றும் ஓணாங்குடி ஊராட்சி மன்றத் தலைவருமானா கே. ஆர். முருகேசன் நகரத் தலைவர் சுரேஷ் தலைமையில் வட்டாரத் தலைவர் அரங்குலவன் முன்னிலையில் கொடி ஏற்றி இனிப்புகளை வழங்கினார், இதில் விவசாய அணி அரங்க. கோபாலகிருஷ்ணன்கீழாநிலைகோட்டை நாகராஜன்,அரிமளம் பாண்டியன்,கலைமகள் ரவி ,சண்முகம், கார்த்திகேயன், ரமேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

# கந்தர்வகோட்டை அருகே மாணவர்கள் கிராமமக்கள் சாலை மறியலால் போக்குவரத்து பாதிப்பு



கந்தர்வகோட்டை , நவ.30-

கந்தர்வகோட்டை அருகே பேருந்துகள் நின்று செல்ல கோரி மாணவர்கள், கிராமமக்கள் நேற்று சாலை மறியலில் ஈடுப்பட்டதால் போக்குவரத்து பாதிப்பு ஏற்ப்பட்டது.

கந்தர்வகோட்டை அருகே உள்ள பழைய கந்தர்வகோட்டை ஊராட்சியில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர், இந்த கிராமத்திலிருந்து பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவ ,மாணவிகள் மற்றும் வேலைக்கு செல்லுவதற்கும் தஞ்சை, புதுகை உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லும் பேருந்துகள் உரிய நேரத்திற்கு வராமலும், பேருந்து நிறுத்தத்தில் நிற்காமல் செல்லுவதும் அன்றாடம் நடைபெறுகிறது .

இது குறித்து புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்காததால் ஆத்திரமடைந்த மாணவாகள் மற்றும் கிராம பொதுமக்கள் நேற்று தஞ்சை, புதுகை தேசிய நெடுஞ்சாலையில் பழைய கந்தர்வகோட்டை பேருந்து நிறுத்தம் எதிரே சாலைமறியல் போராட்டத்தில் ஈடுப்பட்டனர், தகவலறிந்த கந்தர்வகோட்டை காவல்துறையினர் மற்றும் போக்குவரத்து துறை அலுவலர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மரியலில் ஈடுப்பட்டவர்களிடம் பேச்சுவார்த்தை செய்து பேருந்துகள் சரியான நேரத்தில் இயக்கப்படும் , பேருந்துகள் பேருந்து நிறுத்தத்தில் நின்று செல்லும் என உறுதி அளித்ததின் பேரில் மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர், இதனால் இந்த சாலையில் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக கடும் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

## கல்லூரிகளுக்கிடையான கலைபோட்டியில்

# ஸ்ரீ இராஜ ராஜன் கல்வியியல் கல்லூரி மாணவிகள் முதலிடம் பெற்று சாதனை



அமராவதிபுதூர் , நவ.30-

காரைக்குடி, அமராவதிபுதூரில் அமைந்துள்ள ஸ்ரீ இராஜ ராஜன் கல்வியியல் கல்லூரிமற்றும்ஸ்ரீ இராஜராஜன் மகளிர் கல்வியியல் கல்லூரியின் மாணவிகள் மதுரை எஸ்டி ஜஸ்டின் கல்வியியல் கல்லூரியில் ( தன்னாட்சி ) நடைபெற்றகல்வியியல்கல்லூரி மாணவர்களுக் கிடையேயான கலைப்போட்டியில் நடனம் , ரங்கோலி , கைவினைப்பொருட்கள் தயாரித்தலில் முதல் இடங்களையும் பாட்டுப்போட்டியில் இரண்டாம் இடமும் பெற்று சாதனைப் படைத்துள்ளனர்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் சுப்பையா ஆலோசனையின் பேரில் கல்வியியல் கல்லூரிகளுக்கு இடையேயான கலைப்போட்டியில் 13கல்வியியல் கல்லூரிகளில் இருந்து பங்குபெற்ற மாணவர்களின் ஸ்ரீ இராஜ ராஜன் கல்வியியல் கல்லூரிகளின் மாணவிகள் மூன்று நிகழ்ச்சிகளில் முதல் இடங்களையும் ஒரு நிகழ்ச்சியில் இரண்டாம் இடத்தையும் பெற்று சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் பெற்றமாணவர்களை கல்லூரி ஆலோசகர் மற்றும் அழகப்பா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் சுப்பையா கல்லூரி முதல்வர் சிவகுமார் மற்றும் ஒருங்கிணைப்பாளர் வித்யா மற்றும்பேராசிரியர்கள்வாழ்த்திப் பாராட்டினார்கள்.



திமுக இளைஞரணிச் செயலாளர் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளான நவம்பர்-27 ஆலங்குடி அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு சுற்றுச்சூழல் காலநிலைமாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தங்க மோதிரம் அணிவித்தார்.நிகழ்ச்சியில் ஒன்றிய பெருந்தலைவர் வள்ளியம்மை தங்கமணி,பேரூராட்சி தலைவர் ராசிமுருகானாந்தம்,ஒன்றிய செயலாளர்கள் தங்கமணி,வடிவேல்,ரவி,நகரச் செயலாளர் பழனிக்குமார்,துணை செயலாளர் செங்கோல்,கவுன்சிலர்கள்,திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பாஜக, கந்தர்வகோட்டை தொகுதி தேர்தல் பொறுப்பாளராக ஏவிசிசி கணேசன் நியமனம்

புதுக்கோட்டை , நவ.30-

பாராளுமன்ற தேர்தல் பணி பொறுப்பாளர்கள் பட்டியலை தமிழக பாஜக வெளியிட்டுள்ளது. அதன்படி கந்தர்வகோட்டை தொகுதி தேர்தல் பொறுப்பாளராக ஏவிசிசி கணேசன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு, தேர்தல் பணிகளை கவனிப்பதற்காக தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியின் சார்பில்,ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒரு பொறுப்பாளரையும், தலா இரண்டு அமைப்பாளர்களையும் பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத்தலைவர் அண்ணாமலை அறிவித்து பட்டியல் வெளியிட்டார்.

அதன்படி திருச்சி பாராளுமன்றத்திற்கு உட்பட்ட கந்தர்வகோட்டை( தனி) சட்டமன்ற தொகுதிக்கு, புதுக்கோட்டை மேற்கு மாவட்ட பாஜக பொதுச்செயலாளர் ஏவிசிசி கணேசன் தொகுதி பொறுப்பாளராகவும், பாஜக விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் பிரிவு மாநில துணைத்தலைவர் ராமச்சந்திரன் தொகுதி அமைப்பாளராகவும், புதுக்கோட்டை மாவட்ட பாஜக செயலாளர் கங்காதரன்தொகுதி இணை அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு கட்சியினர் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். அதன்படி ஏவிசிசி கணேசனுக்கு புதுக்கோட்டை மாவட்ட பாஜக தலைமை அலுவலகத்தில், பாஜக மேற்கு மாவட்ட தலைவர் விஜயகுமார் சால்வை அணிவித்து வாழ்த்துக்களை தெரித்தார். அருகில் பாஜக தரவு மேலாண்மை பிரிவு மாநில செயலாளர் கார்த்திகேயன், ஊடக பிரிவு மாவட்ட தலைவர் கோவேந்திரன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

# தென்காசி மாவட்ட ஆட்சியரிடம் நல் நூலகர் விருது பெற்றவர்கள் வாழ்த்து பெற்றனர்

தென்காசி,நவ.30-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் இந்த ஆண்டு நல் நூலகர் விருது பெற்றுள்ள கடையம் நூலகர் மீனாட்சி சுந்தரம் நூலக வளர்ச்சி பணிக்காக சிறந்த வாசகர் வட்ட விருது பெற்றுள்ள திப்பணம்பட்டி வாசகர் வட்டத் தலைவர் தங்கராஜ் செயலாளரும் நூலகருமான ரவிச்சந்திரன் ஆகிய இருவரையும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச் சந்திரன் பாராட்டி வாழ்த்தினை தெரிவித்தார்.



உடன் மாவட்ட நூலக அலுவலர் மீனாட்சி சுந்தரம் நூலகர்கள் பிரம நாயகம் சுந்தர் இளங்கோ நூலகத்துறை பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்க முன்னாள் தலைவர் கருப்பசாமி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# அறந்தாங்கி வர்த்தக சங்கம் சார்பாக வணிகர்களுக்கு ஜிஎஸ்டி விழிப்புணர்வு கூட்டம்

அறந்தாங்கி , நவ.30-

அறந்தாங்கி வர்த்தக சங்கம் சார்பாக வணிகர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில்ஜிஎஸ்டிவிழிப்புணர்வு கூட்டம் அறந்தாங்கி வர்த்தக சங்கத் தலைவர் எஸ் காமராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஜிஎஸ்டி பற்றி விளக்கம் அளிப்பதற்காக சென்னையில் இருந்து வருகை தந்திருந்த ஆடிட்டர். ஆர்.சுப்பிரமணியன் ஜிஎஸ்டி குறித்த வணிகர்களின் சந்தேகங்களுக்கு கேள்விபதில் முறையில் விளக்கம் அளித்தார். இந்த நிகழ்ச்சியில் அறந்தாங்கி வர்த்தக சங்கத்தின் செயலாளர் வெ.தவசுமணிஅனைவரையும் வரவேற்றார்.




முன்னாள் வர்த்தக சங்க தலைவர் ராஜ்குமார், ரவீந்திர குமார், சந்திர மோகன்,முத்துக்குமார், அப்துல் முத்தலிப், முகமது கனி ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சியில் அறந்தாங்கி வர்த்தக சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் அறந்தாங்கி கோட்டத்தை சேர்ந்த வணிகர் சங்கங்களின் வணிகர்கள் மற்றும் அறந்தாங்கி வர்த்தக நிறுவனங்களின் வணிகர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். அறந்தாங்கி வர்த்தக சங்கத்தின் பொருளாளர் சேக் அப்துல்லா நன்றி தெரிவித்தார்.

# புதுக்கோட்டையில் ஆபத்தான துருப்பிடித்த இரும்பு மின் கம்பம்




புதுக்கோட்டை பேருந்து நிலையம் சைக்கிள் ஸ்டாண்ட் அமைந்துள்ள இடத்தில் உள்ள இரும்பு மின் கம்பம் துருப்பிடித்து எப்போது விழுமோ என்று நிலையில் பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இவற்றை உடனடியாக அகற்றி புதிய மின்கம்பத்தை அமைத்திட வேண்டும் என்பது புதுகை வரலாறின் எதிர்பார்ப்பு

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# “தனியார் லீகுகளை விட நாட்டுக்கே முக்கியத்துவம் அளிப்பீர்”

## பாகிஸ்தான் வீரர்களுக்கு ஹபீஸ் அறிவுரை



**கராச்சி : நவ. 30,**

**பாகிஸ்தான் அணியின் இயக்குநர் முகமது ஹபீஸ், “பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்துடன் ஒப்பந்தத்தில் உள்ள வீரர்கள் நாட்டுக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும். தனியார் லீகுகளுக்கான முக்கியத்துவம் இரண்டாம் பட்சம்தான்” என்று கூறியுள்ளார்.**

பாகிஸ்தான் அணி தற்போது ஆஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் பயணம் மேற்கொள்ளவிருக்கிறது. இந்தத் தொடரில் விளையாடும் வாய்ப்பை நிராகரித்தார் வேகப்பந்து வீச்சாளர் ஹாரிஸ் ராவுஃப். இவரது இந்த முடிவு சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளதே முகமது ஹபீஸ் இவ்வாறு கூறக் காரணமாக அமைந்தது.

ஒயிட் - பால் ஸ்பெஷலிஸ்ட் ரவுஃப், தனது வாழ்க்கையில் ஒரே ஒரு டெஸ்ட் மற்றும் ஒன்பது முதல் தர போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளார், ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் செய்வதற்கான வாய்ப்பை நிராகரித்தார். அங்கு பாகிஸ்தான் மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாட உள்ளது. ஆஸ்திரேலியா செல்லும் பாகிஸ்தான் அணிக்கு ஆடுவதை விடுத்து ஹாரிஸ் ராவுஃப் பிக்பாஷ் லீக் டி20-யில் மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணிக்கு ஆட பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய சம்மதத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்.

இந்நிலையில், முகமது ஹபீஸ் மேலும் கூறியது: “அனைத்து மத்திய ஒப்பந்தம் மற்றும் உள்நாட்டு ஒப்பந்த வீரர்கள் அனைவரும், பாகிஸ்தானுக்கு ஆடுவதை முன்னுரிமையாகக் கொள்ள வேண்டும். 20-25 வீரர்களுக்கு ஒப்பந்தம் வழங்குவதன் நோக்கம், அவர்கள் பாகிஸ்தான் அணிக்கு விளையாடுவதை உறுதி செய்வதற்கே தவிர, அவர்கள் தங்கள் இஷ்டத்துக்கு தனியார் கிரிக்கெட் கிளப்புகளுக்கு ஆடுவதற்காக அல்ல.

இப்போதெல்லாம் வீரர்கள் தனியார் லீகுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது பெருகி வருகிறது. இதனை ஆசியக் கோப்பையிலும் பார்த்தோம், உலகக் கோப்பையிலும் பார்த்தோம். இதனால் பணிச்சுமை, களைப்பு, காயங்களில் வீரர்கள் சிக்குகின்றனர். இப்போது டி20 உலகக் கோப்பை நோக்கி திட்டமிட வேண்டியிருப்பதால் வீரர்கள் தனியார் லீகுகளில் ஆடக் கேட்கும் தடையில்லாச் சான்றிதழ் இனி பாகிஸ்தான் அணியின் தேவைகளைப் பொறுத்தே பரிசீலிக்கப்படும்.

பாகிஸ்தான் அணிக்கு ஃபிட்டான வீரர்கள் தேவை என்றால், அவர்களின் பணிச்சுமையை நாங்கள் மேலாண்மை செய்யப் போகிறோம். வீரர்களின் அதிகபட்ச ஆற்றல் பாகிஸ்தான் அணிக்குத்தான் பயன்பட வேண்டும். அதற்காக லீகுகளில் விளையாடாதீர்கள் என்று சொல்லவில்லை, வாய்ப்பிருந்தால் நிச்சயம் அதுவும் பரிசீலிக்கப்படவே செய்யும்” என்று அவர் கூறினார்.

# சிறப்பானவற்றை தொடர்ந்து செய்வதற்கான எங்களது நாட்டம் குறையவே குறையாது

## பதவி நீட்டிக்கப்பட்ட பயிற்சியாளர் ராகுல் திராவிட் பகிர்வு



**மும்பை : நவ. 30,**

**நடந்து முடிந்த உலகக் கோப்பையுடன் நிறைவடைந்த இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் ராகுல் திராவிட்டின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.**

இதற்கான பிசிசிஐ-யின் கோரிக்கையை ராகுல் திராவிட் ஏற்றுக் கொண்டார். ஆனால், நீட்டிப்பு காலம் பற்றிக் கூறப்படவில்லை. அடுத்த ஆண்டு ஜூன் மாதம் நடைபெறும் டி20 உலகக் கோப்பை வரை திராவிட்டின் ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்டிருக்கலாம் என்று தகவல்கள் கூறுகின்றன.

முன்பெல்லாம் 2 ஆண்டுகள், ஓராண்டு என்று நீட்டிக்கப்படும் போதே வெளியுலகுக்கு அறிவிக்கப்படும். இப்போதுள்ள பிசிசிஐ-யில் எல்லாமே மர்மம்தான். அவர்களுக்கு மட்டுமே தெரிந்த மூடுமந்திரமாக எதைத்தான் வைத்துக் கொள்வது என்றில்லாமல் எல்லாவற்றையும் வைத்துக் கொள்கிறார்கள். நல்ல வேளை யாருக்கும் சொல்லாமல் கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதில்லை. அதுவரை ஆறுதல்தான்.

ரவிசாஸ்திரிக்குப் பிறகு ராகுல் திராவிட் தலைமைப் பயிற்சியாளராக நவம்பர் 2021-ல் பொறுப்பேற்றார். இவரது பயிற்சியின் கீழ் இந்திய அணி ஐசிசி கோப்பைகளை வென்றிருக்காவிட்டாலும் ஒருநாள், டெஸ்ட், டி20 என்று மூன்று வடிவங்களிலும் நம்பர் 1 இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது. 2022, டி20 உலகக் கோப்பையில் அரையிறுதி வரை சென்றது இந்திய அணி.

2023, ஐசிசி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பில் ரன்னர்கள், 2023, உலகக் கோப்பையிலும் ரன்னர்கள். குறிப்பாக 2023 உலகக் கோப்பையில் இந்திய அணி ஆடிய விதம் அனைவரையும் பெரிதும் ஈர்த்தது. இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக பிட்சில் குளறுபடி செய்ததும் கடும் அரசியல் நெருக்கடியினாலும் இந்திய அணி தோற்றது.

கடந்த 2 ஆண்டுகளாக ராகுல் திராவிட் இந்திய அணிக்குள் ஏற்படுத்திய ‘அமைப்பு’ தொந்தரவுக்குள்ளாக்கி விடக் கூடாது என்று அவரையே நீட்டித்துள்ளனர். தனது பதவிநீட்டிப்பு குறித்து ராகுல் திராவிட் கூறும்போது, “கடந்த 2 ஆண்டுகள் மறக்க முடியாதது. எல்லோருடனும் உயர்வையும் கண்டோம், தாழ்வையும் கண்டோம். இந்தப் பயணத்தில் வீரர்கள் காட்டிய சகோதரத்துவமும் ஆதரவும் அபாரமானது. ஓய்வறையில் நாங்கள் ஏற்படுத்தியுள்ள கலாசாரம் உண்மையில் பெருமை கொள்ளத்தக்கது. வெற்றியோ தோல்வியோ உறுதியுடன் நிற்கும் ஒரு பண்பாடு இது. நம் அணியிடம் இருக்கும் திறமைகள், புத்திசாலித்தனங்கள் தனித்துவமானவை. நாங்கள் கொண்டு வந்தது என்னவெனில் சரியான நிகழ்முறை மற்றும் தயாரிப்புகளில் கறார் தன்மை ஆகியவை ஆட்டத்தின் ஒட்டுமொத்த முடிவுகளில் நிச்சயம் தாக்கத்தை செலுத்தும் என்பதே.

இந்த காலகட்டத்தில் என் மீது நம்பிக்கை வைத்ததற்காகவும், எனது தொலைநோக்குப் பார்வையை ஆதரித்ததற்காகவும், என் திட்டங்களுக்கும் யோசனைகளுக்கும் ஆதரவு வழங்கியதற்காகவும் பிசிசிஐ மற்றும் அதன் அலுவலகப் பொறுப்பாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பயிற்சியாளர் என்றால் வீட்டை விட்டு நீண்ட காலம் தள்ளி இருக்க வேண்டும், ஆகவே, எனது குடும்பத்தின் தியாகங்களையும் ஆதரவையும், அவர்களது பொறுமையையும் நான் மிகவும் பாராட்டுகிறேன்.

திரைக்குப் பின்னால் அவர்களின் ஆதரவு இல்லையெனில் இந்தப் பயணம் நினைவுகூரத்தக்கதாக இருந்திருக்காது. ஆகவே, குடும்பத்தினரின் ஆதரவு மதிப்புக்குரியது. உலகக் கோப்பைக்குப் பிந்தைய காலக்கட்டத்தில் கடும் சவால்கள் உள்ளன. ஆனால், சிறப்பானவற்றை தொடர்ந்து செய்வதற்கான எங்களது நாட்டம் குறையவே குறையாது” என்று கூறினார்.

# அடுத்த ஆண்டு மார்ச்சில் அறிமுகமாகிறது ஐஎஸ்பிஎல் டி-10 கிரிக்கெட் தொடர்




**மும்பை : நவ. 30,**

**ஐபிஎல் பாணியில் இந்தியன் ஸ்ட்ரீட் ப்ரீமியர் லீக் (ஐஎஸ்பிஎல்) என்ற புதிய கிரிக்கெட் தொடர் இந்தியாவில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.**

இது 10 ஓவர்களை கொண்ட டென்னிஸ் பந்து கிரிக்கெட் தொடராகும். இந்த ஐஎஸ்பிஎல் டி10 தொடர் அடுத்த ஆண்டு மார்ச் 2-ம் தேதி தொடங்கி 9-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் மொத்தம் 19 போட்டிகள் நடத்தப்படவுள்ளன. தொடரின் அனைத்து ஆட்டங்களும் கிரிக்கெட் மைதானங்களில் நடத்தப்படவுள்ளது. இத்தொடரில் மும்பை, ஹைதராபாத், பெங்களூரு, சென்னை, கொல்கத்தா மற்றும் ஸ்ரீநகரைச் சேர்ந்த 6 அணிகள் பங்கேற்கவுள்ளன.

இந்தியன் ஸ்ட்ரீட் ப்ரீமியர் லீக் (ஐஎஸ்பிஎல்) போட்டியில் பங்குபெறும் அணி ஒன்றில் 16 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். ஒரு அணிக்கு உதவிப் பணியாளார்கள் 6 பேர் இருக்கலாம். ஒவ்வொரு அணிக்கும் ஒரு கோடி ரூபாய் ஏலத் தொகையாக வழங்கப்படும். வீரர்களுக்கான ஏலம் அடுத்த ஆண்டு பிப்ரவரி 24-ம் தேதி நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வீரர் ஒருவருக்கான குறைந்தபட்ச ஏலத்தொகை ரூ.3 லட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தியன் ஸ்ட்ரீட் ப்ரீமியர் லீக் (ஐஎஸ்பிஎல்) தொடரின் குழுத் தலைவராக இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டுள்ளார். சர்வதேசப் போட்டிகளில் விளையாடும் கிரிக்கெட் வீரர்களைப் போன்று விளையாட வேண்டும் என்ற கனவோடு உள்ள பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்காக இந்த புதிய முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாக இந்தியன் ஸ்ட்ரீட் ப்ரீமியர் லீக் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாரா உலக வில்வித்தை தரவரிசை நம்பர் ஒன் இடத்தை பிடித்த இந்திய வீராங்கனை

**புதுடெல்லி : நவ. 30,**

**பாரா உலக வில்வித்தை தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டது.**



மாற்றுத் திறனாளிகளுக்கான பாரா உலக வில்வித்தை தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் பெண்களுக்கான காம்பவுண்ட் ஓபன் பிரிவில் 16 வயதான இந்திய வீராங்கனை ஷீதல் தேவி ‘நம்பர் ஒன்’ இடத்தை பிடித்துள்ளார். சமீபத்தில் நடந்த பாரா ஆசிய விளையாட்டில் 2 தங்கப்பதக்கங்கள் வென்றதன் மூலம் அவர் 2 இடங்கள் முன்னேறி ‘நம்பர் ஒன்’ இடத்தை பிடித்துள்ளார்.

வரலாறு சினிமா

# கிருத்திகா உதயநிதி இயக்கத்தில் நடிக்கும் ஜெயம் ரவி படத்திற்கு கிளாசிக் ஹிட் பட டைட்டில்



**சென்னை : நவ. 30,**

**கிருத்திகா உதயநிதி இயக்கத்தில் நடிகர் ஜெயம் ரவி, நித்யா மேனன் நடிக்கும் புதிய படத்திற்கு கிளாஸிக் ஹிட் படத்தின் டைட்டில் வைத்துள்ளதாகப் படக்குழு அறிவித்துள்ளது.**

’பொன்னியின் செல்வன்’, ‘இறைவன்’ படங்களுக்குப் பிறகு நடிகர் ஜெயம் ரவி தற்போது கைவசம் நிறையப் படங்களை வைத்துள்ளார். ‘சைரன்’, ‘தனிஒருவன்2’, ’தக் லைஃப்’, ‘ஜீனி’ உள்ளிட்டப் படங்கள் கைவசம் உள்ளது. இதுமட்டுமல்லாது, ‘எம். குமரன் சன் ஆஃப் மகாலட்சுமி’ படத்தின் இரண்டாம் பாகத்தின் கதையும் உருவாகி வருவதாகத் தகவல் வெளியானது. இதில், ’சைரன்’ திரைப்படம் படப்பிடிப்பு முடிந்து ரிலீஸுக்குத் தயாராக உள்ளது. இதில் ஜெயம் ரவி ஜோடியாக கீர்த்தி சுரேஷ் நடித்துள்ளார்.

இந்த நிலையில், கிருத்திகா உதயநிதி இயக்கத்தில் இவர் நடிக்கும் புதிய படத்தின் டைட்டில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. நித்யா மேனன் இவருக்கு ஜோடியாக நடிக்க ஏ.ஆர். ரஹ்மான் இசையில் இந்தப் புதிய படத்திற்கு கிளாஸிக் ஹிட் படமான ‘காதலிக்க நேரமில்லை’ என டைட்டில் வைத்துள்ளனர். இதன் முதல்பார்வை போஸ்டர் தற்போது வெளியாகியுள்ளது. இதில் நித்யா மேனன் கதாநாயகியாக நடிக்க ரெட் ஜெயண்ட் நிறுவனம் படத்தைத் தயாரிக்க உள்ளது. படத்திற்கு இசை ஏ.ஆர்.ரஹ்மான். காதல் படங்களை இயக்குவதில் பெயர் பெற்ற கிருத்திகா முதல் பார்வை போஸ்டரிலேயே கவனம் ஈர்த்துள்ளதாக ரசிகர்கள் தெரிவித்து வருகின்றனர்.

# நடிச்சா இனி ஹீரோதான் : ஷாருக்கானால் அதிரடி முடிவு எடுத்த விஜய்சேதுபதி



**சென்னை : நவ. 30,**

**இனிமேல் வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்கப் போவதில்லை. நடித்தால் இனி ஹீரோதான் என முடிவெடுத்துள்ளார் விஜய்சேதுபதி. இந்த முடிவுக்குப் பின்னால் ஷாருக்கான் உள்ளாரா என்ற சந்தேகத்தை ரசிகர்கள் கிளப்பி வருகின்றனர்.**

நடிகர் விஜய்சேதுபதி இனிமேல் வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்கப் போவது இல்லை என முடிவெடுத்துள்ளதாகக் கூறியுள்ளார். சர்வதேச கோவா திரைப்பட விழாவில் பேசிய விஜய்சேதுபதி, “ஹீரோக்கள் என்னிடம் கேட்டுக்கொண்டதால் தான் நான் பல படங்களில் வில்லனாக நடிக்க ஒப்புக்கொண்டேன். நிறைய அழுத்தம் இருப்பதால் இனி வில்லனாக நடிக்க வேண்டாம் என முடிவு செய்திருக்கிறேன்.

வில்லனாக நடிக்கும்போது சில கட்டுப்பாடுகள் இருக்கிறது. ஹீரோவை விட வில்லன் பவர்புல்லாக தெரிந்துவிடக்கூடாது என்பதற்காகவே பார்த்து பார்த்து நடிக்க வைக்கிறார்கள். இதனால், நான் நன்றாக நடித்த நிறைய காட்சிகள் எடிட்டிங்கில் போய்விட்டது. அதனால் சில வருடங்கள் வில்லனாக நடிக்க வேண்டாம் என முடிவெடுத்துள்ளேன்” எனக் கூறியுள்ளார்.

அண்மையில், விஜய்சேதுபதி ‘ஜவான்’ படத்தில் ஷாருக்கானுக்கு வில்லனாக நடித்தார். படம் வெளியாவதற்கு முன்பு அவர் கதாபாத்திரம் மீது எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், படம் வெளியான பின்பு அவர் கதாபாத்திரம் மீது பெரிய ஈர்ப்பில்லை என்ற விமர்சனமே அதிகம் பார்க்க முடிந்தது.

இதனால்தான் விஜய்சேதுபதி இந்த முடிவு எடுத்தாரோ என்ற சந்தேகத்தை ரசிகர்கள் கிளப்பி வருகின்றனர். ‘விக்ரம் வேதா’ படத்தில்தான் நெகட்டிவ் ரோலில் நடிக்க ஆரம்பித்தார் விஜய்சேதுபதி. அதன்பிறகு, ’பேட்ட’, ‘மாஸ்டர்’, ‘விக்ரம்’ எனத் தொடர்ச்சியாக முன்னணி ஹீரோக்களுக்கு வில்லனானவர். தற்போது இந்த முடிவு எடுத்துள்ளது ரசிகர்களை ஆச்சரியப்பட வைத்துள்ளது.

# “வள்ளி மயில்” திரைப்பட டீசர் வெளியீட்டு விழா





**சென்னை : நவ. 30,**

**நல்லுசாமி பிக்சர்ஸ் சார்பில் தயாரிப்பாளர் தாய் சரவணன் தயாரிப்பில் இயக்குநர் சுசீந்திரன் இயக்கத்தில், விஜய் ஆண்டனி, ஃபரியா அப்துல்லா, பாரதிராஜா, சத்யராஜ் நடிக்கும் புதிய திரைப்படம் “வள்ளிமயில்”. 80களின் நாடகக்கலை பின்னணியில் பரபரப்பான திரில்லர் படமாக உருவாகியுள்ள இப்படத்தின் டீசர் வெளியீட்டு விழா படக்குழுவினர் கலந்து கொள்ளப்பத்திரிக்கை ஊடக நண்பர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**

இவ்விழாவினில், இயக்குநர் சுசீந்திரன் பேசியதாவது : நல்லுசாமி பிக்சர்ஸுடன் எனக்கு இது 4 வது படம். வள்ளி மயில் ஒரு க்ரைம் திரில்லராக ஆரம்பித்த படம். ஒரு வில்லனைப் பின்னணியாகக் கொண்டு கதை நடக்கும். பிரகாஷ்ராஜ் சார் மிரட்டியிருக்கிறார். இமான் சார் உடன் 7 வது படம், இன்னும் நிறையப் படங்கள் வேலை செய்வோம். விஜய் ஆண்டனி சாருடன், முதல் முறையாக வேலை செய்கிறேன். உங்கள் படம் சார் நீங்கள் சொல்வதை செய்கிறேன் என்று வந்தார், அவருக்கு நன்றி. வெண்ணிலா கபடிக் குழு படத்திற்குப் பிறகு நிறையக் கதாபாத்திரங்கள். சத்யராஜ் சார் மிக முக்கியமான ரோல், அவரைச் சுற்றி 4 பேர் அதே போல், விஜய் ஆண்டனியை சுற்றி 4 பேர் எனப் பெரிய கூட்டம் படத்தில் இருக்கும். ஃபரியா அப்துல்லா மிக முக்கியமான ரோல், அற்புதமாக நடித்துள்ளார். மிகச் சிக்கலான கதை, அதை மிக எளிமையாகச் சொல்ல முயன்றுள்ளோம். எனக்காக இப்படத்தில் கடுமையாக உழைத்த தொழில் நுட்ப கலைஞர்களுக்கு நன்றிகள். இந்தப் படம் உருவாக்கியது மிக இனிமையான அனுபவம். இது டீசர் விழா தான், இன்னும் நிறைய விழா இருக்கிறது. இன்னும் நிறைய பகிர்ந்து கொள்கிறேன். உங்கள் ஆதரவை தாருங்கள் நன்றி.

ஆடை வடிவமைப்பாளர் ராதிகா பேசும்போது, இந்த படம் 80 காலகட்டத்தில் இருப்பதால் எனக்கு அதிக வேலை இருந்தது. ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து செய்துள்ளோம், பெரும் உழைப்பைக் கொடுத்துள்ளோம். இந்த படத்திற்கு உங்கள் ஆதரவு தேவை. நன்றி.

பாடலாசிரியர் விவேகா கூறும்போது, வள்ளி மயில் தூய தமிழ் பெயர், பெயரே மிக அழகாக அமைந்துள்ளது. விஜய் ஆண்டனி இசையமைப்பாளராக அவருக்கு நிறையப் பாடல்கள் எழுதியுள்ளேன். ஆனால் நடிகராக இது முதல் படம். மிக மகிழ்ச்சியாக இருக்கிறது. இமான் உடன் ஆரம்ப காலத்தில் இருந்து வேலை பார்க்கிறேன். இயக்குநர் சுசீந்திரன் அவர்கள் சமூகப் பொறுப்புள்ள இயக்குநர். ஒரு நல்ல படைப்பை தந்துள்ளார். இந்த படத்தில் பணியாற்றும் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள். இந்த படம் வெற்றியடைய வாழ்த்துக்கள்.

தயாரிப்பாளர் பிரவீன், இந்தப் படம் மிக அற்புதமான படம். நான் பைனான்ஸியராக வந்தேன், இப்படம் பிடித்துத் தயாரிப்பில் பங்கு கொண்டேன். மிக அற்புதமான அனுபவம். விஜய் ஆண்டனி கடுமையாக உழைத்துள்ளார். சுசீந்திரன் மிக சூப்பராக உருவாக்கியுள்ளார். அனைவருக்கும் வாழ்த்துக்கள் நன்றி.

சண்டை பயிற்சி இயக்குநர் ராஜசேகர், இப்படத்தில் சுசீந்திரன் அவர்களிடம் நிறையக் கற்றுக்கொண்டேன். விஜய் ஆண்டனி சொன்னதை அப்படியே செய்வார். மிகவும் ஒத்துழைப்புத் தந்தார். சத்யராஜ் சாருக்கு ஃபைட் இல்லை என்பது வருத்தம். படம் பார்த்து உங்கள் கருத்தைச் சொல்லுங்கள் நன்றி.

இசையமைப்பாளர் இமான், நல்லுசாமி பிக்சர்ஸுக்கு நன்றி. சில வருடங்களுக்கு முன் சுசீந்திரன் சார் இந்தக் கதை சொன்னார். அங்கு ஆரம்பித்த படம் இன்று முழுமையாக வந்திருப்பதைப் பார்க்க சந்தோஷமாக உள்ளது. விஜய் ஆண்டனி சாரை ஆரம்ப காலங்களில் இருந்து தெரியும். சவுண்ட் இஞ்சினியராக அவரைச் சந்தித்துள்ளேன். கொஞ்சம் கொஞ்சமாக மாறி வரும் அவரது வளர்ச்சி மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. சுசீந்திரன் எப்போதும் சினிமா பத்தி மட்டுமே பேசிக்கொண்டு இருப்பார். அவருக்கு இந்தப் படம் மிகப்பெரிய வெற்றிப்படமாக அமையும். சத்யராஜ் சார் நடித்த படத்திற்கு இசையமைத்திருப்பது மகிழ்ச்சி. இந்த படத்தில் பணியாற்றும் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள். இந்த படம் வெற்றியடைய வாழ்த்துக்கள்.

தொடர்ந்து நடிகர் விஜய் ஆண்டனி பேசும்போது, சுசீந்திரன் சார் உடன் வேலை பார்த்தது மிக நல்ல அனுபவம். பிச்சைக்காரன் படமெடுக்கும் போது, இந்தப் படம் வேலை பார்க்க வேண்டிய கட்டாயம் நிகழ்ந்தது. இந்த படத்தில் இயக்கம் பற்றி நான் நிறையக் கற்றுக்கொண்டேன். சுசீந்திரன் சாருக்கு நன்றி. சத்யராஜ் சாருடன் இணைந்து திரையில் நடிப்பது மிக மகிழ்ச்சி, அவருக்கு நான் ரசிகன். இமானுக்கும் நான் ரசிகன். அவரது இசை குறித்து எனக்கு எப்போதும் ஆர்வம் இருக்கும். அவரது அப்பா எனக்கு நெருக்கம். அவரது வளர்ச்சி, மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தப் படம் வித்தியாசமான படம். உங்களுக்குப் பிடிக்கும். படக்குழு அத்தனை பேருக்கும் வாழ்த்துக்கள் நன்றி.

நடிகர் சத்யராஜ் பேச்சில், நாம் நடிக்கும் நிறைய படங்களில் நம் கொள்கைகள் பற்றி எல்லாம் பேச முடியாது. வேலை பார்க்க வந்துள்ளோம் அதை மட்டும் செய்ய வேண்டும் எனச் செய்துவிட்டுப் போவோம். ஆனால் இந்தப் படம் என் கொள்கைகள் பேச முடிந்த படமாக அமைந்தது மகிழ்ச்சி. சுசீந்திரன் ஒவ்வொரு படமும் வித்தியாசமாக எடுக்கிறார். இன்னொரு கதை வைத்துள்ளார், அது வந்தால் இன்னும் மிகப்பெரிய படமாக வரும். விஜய் ஆண்டனி மிகச்சிறந்த மனிதர், தனக்கு என்ன வரும் என்பதில் தெளிவானவர். அவருடன் நடித்தது மகிழ்ச்சி. வள்ளி மயில் எனப் பெண் கதாப்பாத்திர பெயரில் தலைப்பு வைத்ததற்கு மகிழ்ச்சி. அதற்கு ஒப்புக்கொண்ட விஜய் ஆண்டனிக்கு நன்றி. இமான் பற்றி மிகச் சிறந்த விஷயங்கள் கேட்டுள்ளேன். எனக்குத் தெரிந்த ஒரு படத்திற்கு சம்பளமே வாங்காமல் இசையமைத்தார், உங்கள் மனதிற்கு நன்றி. ஃபரியா மிகச்சிறந்த நாயகி, எது சொன்னாலும் உடனே செய்வார். புதுமையான கதைக்களம். இப்படத்திற்காக உங்களைப்போல் நானும் காத்திருக்கிறேன் நன்றி.

இறுதிக்கட்ட பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் இப்படத்திற்கு டி.இமான் இசையமைக்கிறார். பாஸ்கர் சக்தி வசனம் எழுதுகிறார். ஒளிப்பதிவு விஜய் சக்ரவர்த்தி, எடிட்டர் ஆண்டனி, ஆர்ட் டைரக்டர் உதயகுமார், மக்கள் தொடர்பு சதீஷ் AIM, பப்ளிசிட்டி டிசைன்ஸ் ட்யூனி ஜான் ஆகியோர் குழுவில் பணியாற்றுகின்றனர். இவர்களுடன் அறந்தாங்கி நிஷா, கனி அகத்தியன், புஷ்பா புகழ் சுனில், ரெடின் கிங்ஸ்லி, ஜி பி முத்து, தயாளன் உட்பட பல நடிகர்கள் இணைந்து நடிக்கின்றனர்.

வரலாறு உலகம்

# சந்தித்த இன்னல்கள் : விவரிக்கும் ஹமாஸ் அமைப்பினரால் விடுவிக்கப்பட்ட பிணைக்கைதிகள்



**இஸ்ரேல் : நவ. 30,**

**ஹமாஸ் - இஸ்ரேல் இடையே 46 நாட்களுக்கு மேல் சண்டை நடைபெற்று வந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை முதல் நான்கு நாள் போர் நிறுத்தம் ஏற்பட்டது. அந்த போர் நிறுத்தம் மேலும் இரண்டு நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டது.**

முதல்நான்குநாட்களில்50 பிணைக்கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் விடுவித்தனர். அதேவேளையில் இஸ்ரேல் சிறையில் இருந்து 150 பாலஸ்தீனர்கள் விடுவிக்கப்பட்டனர். ஹமாஸ் அமைப்பினரால் விடுவிக்கப்பட்டவர்கள், மருத்துவமனையில் பரிசோதனைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஹமாஸ் அமைப்பினரால் எவ்வாறு நடத்தப்பட்டனர் என்பதை தெரிந்து கொள்ள செய்தி நிறுவனங்கள் முயற்சி செய்தன.

ஆனால், மருத்துவமனைகளுக்கு தகவலை பரிமாறிக் கொள்ளவதை தவிர்க்க வலியுறுத்தப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் தகவல் கசிந்துள்ளது. வடக்கு காசாவில் பிடிக்கப்பட்ட தாய்லாந்தை சேர்ந்த 17 பேர் ஹமாஸ் அமைப்பினரால் விடுவிக்கப்பட்டனர். அவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவமனையில் உள்ள அதிகாரி மூலம் பிணைக்கைதிகள் எதிர்கொண்ட இன்னல்கள் தெரியவந்துள்ளது.

அவர்களுக்கு மிகவும் குறைந்த ஊட்டச்சத்து குறைந்த உணவுகளே கொடுக்கப்பட்டடுள்ளத. மேலும், கொஞ்சமாக அரிசி உணவு, பதப்படுத்தப்பட்ட உணவு, ஃபவா பீன்ஸ், சில நேரங்களில் பிட்டாவுடன் உப்பு கலந்த சீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர்த்து மற்ற ஏதும் வழங்கப்படவில்லை. காய்கறிகள், முட்டை போன்ற உணவுகள் வழங்கவில்லை.

பலர் தங்களுடைய எடையில் 10 சதவீதம் மற்றும் அதற்கு மேலும் குறைந்துள்ளனர். அவர்களுக்கு ஒளி (வெளிச்சம்) காட்டப்படவில்லை. ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் மட்டுமே வெளிச்சம் காட்டப்பட்டுள்ளது. தங்களது தகவலை பரிமாறிக்கொள்ள பேனா அல்லது பென்சில் கேட்டபோது, அதற்கு ஹமாஸ் அமைப்பினர் அனுமதி அளிக்கவில்லை. எழுத்து மூலம் தகவலை பரிமாற்றம் செய்யக்கூடும் என பயந்ததால் அனுமதிக்கவில்லை. தொலைக்காட்சி, வாசிப்பு தொடர்பானதுக்கும் அனுமதிக்கவில்லை. ஒருவர் மூலம் ஒருவர் என்ற வகையில் தகவலை பரிமாறிக் கொள்ள அனுமதித்துள்ளனர். முதியவர்கள் தூங்குவதற்கு சிரமப்பட்டுள்ளனர். சேரில் இருந்தவாறு தூங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இன்னல்களை சந்தித்ததாக மருத்துவமனை அதிகாரி தகவலை பகிர்ந்துள்ளார். இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த சகோதரர் மற்றும் சகோதரி ஆகியோர் விடுவிக்கப்பட்ட பிறகு தங்களது தாயாரை சந்திக்கும் மகிழ்ச்சியில் வந்தபோது, ஹமாஸ் தாக்குதலின்போது உயிரிழந்ததாக அவர்களிடம் தெரிவித்துள்ளனர். இதனால் அவர்கள் மனவேதனை அடைந்தனர்.

# உலகப் பணக்காரர் வாரன் ஃபபெட்டின் நண்பர் சார்லி முங்கர் காலமானார்



**கலிபோர்னியா : நவ. 30,**

**உலகின் வெற்றிகரமான தொழில் முதலீட்டாளராக கருதப்படும் வரான் பஃபெட்டின் நீண்டகால நண்பரும், தொழில் பங்குதாரருமான சார்லி முங்கர், தனது 99வது வயதில் காலமானார்.**

வரான் பஃபெட்டின் பெர்க்சையர் ஹதாவே நிறுவனத்தில் கடந்த 1978-ம் ஆண்டு துணைத்தலைவராக இணைந்த சார்லி முங்கர், கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக அந்த பதவியிலேயே வெற்றிகரமாக நீடித்தார். சிறிய டெக்ஸ்டைல்ஸ் நிறுவனமாக இருந்த பெர்க்சையர் ஹதாவே-வை பல ஆயிரம் கோடிகளுக்கு சொந்தமான நிறுவனமாக வளர்த்தெடுத்ததில் சார்லி முங்கரின் பங்கு அளப்பரியது.

கலிபோர்னியாவில் உள்ள மருத்துவமனையில் நேற்று அதிகாலை சார்லி முங்கரின் உயிர் பிரிந்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளதாக பெர்க்சையர் ஹதாவே வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனது நீண்டகால நண்பரும், தொழில் பங்குதாரருமான சார்லி முங்கரின் மறைவு குறித்து வாரன் பஃபெட் வெளியிட்ட இரங்கல் செய்தியில், ‘சார்லி முங்கரின் வசீகரம், அறிவு, பங்களிப்பு ஆகியவை இல்லாமல் பெர்க்சையர் ஹதாவே தற்போது அடைந்திருக்கும் இவ்வளவு பெரிய புகழை எட்டியிருக்க முடியாது. அவரும் நானும் உறுதியான மனநிலையைக் கொண்டவர்கள். எங்களிடையே ஒரு முறைகூட விவாதம் எழுந்ததில்லை’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

வாரன் பஃபெட்டை போலவே, அமெரிக்காவின் நெப்ரஸ்கா மாகாணத்தின் ஒமாஹாவில் கடந்த 1924-ல் பிறந்து வளர்ந்தவர். சார்லி முங்கரும், வாரன் பஃபெட்டும் தங்களது இளமை காலத்தில் அதாவது கடந்த 1959-ல் முதன் முதலாக சந்தித்தனர். அதுமுதல் கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக அவர்களது நட்பு தொடர்ந்தது. சார்லி முங்கரும் பல ஆயிரம் கோடிகளைச் சம்பாதித்தவர் என்றாலும் தனது செல்வத்தில் பெரும் பகுதியை அறக்கட்டளைகளுக்கு தானமாக வழங்கிவிட்டார். தான் மறையும் வரை பெர்க்சையர் ஹதாவே-விலிருந்து அதிகாரப்பூர்வமாக சார்லி முங்கர் ஓய்வு பெறவில்லை. வரும் 2024 ஜனவரி 1-ம் தேதி தனது 100-வது வயதை எட்டவிருந்த சார்லி முங்கர் அதற்கு முன்னதாகவே மறைந்துவிட்டார்.

# தென்னப்பிரிக்கா சுரங்கத்தில் பயங்கரம் லிஃப்ட் அறுந்து விழுந்து 11 பேர் பலி



**தென்னாப்பிரிக்கா : நவ. 30,**

**தென்னாப்பிரிக்காவில் இயங்கி வரும் பிளாட்டினம் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் சிக்கி 11 தொழிலாளா்கள் உயிரிழந்தனர். மேலும், 75 பேர் காயமடைந்தனர்.**

தென்னாப்பிரிக்காவின் ரஸ்டன்பர்க் நகரில் தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான பிளாட்டினம் சுரங்கம் இயங்கி வருகிறது. அந்தச் சுரங்கத்தில் லிஃப்ட் கம்பி அறுந்து, அது 200 மீட்டர் உயரத்திலிருந்து விழுந்தது. இதில் 11 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர், 75 பேர் காயமடைந்தனர். இந்த விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த 86 பேரும் லிஃப்டில் சென்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பணிநேரம் முடிந்து தொழிலாளர் குழுவினர் மாறும்போது இந்த விபத்து ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுரங்கத்தில் லிஃப்ட் அறுந்து விழுந்து விபத்து ஏற்படுவது மிகவும் அபூா்வமானது என கூறப்படுகிறது. இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. பிளாட்டினம் உற்பத்தியில் உலகில் முதலிடம் வகிக்கும் நாடு தென்னாப்பிரிக்கா என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த நாட்டின் பல்வேறு சுரங்கங்களில் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு அவற்றில் அதிக உயிர்ச்சேதம் ஏற்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. கடந்த 2022-ம் ஆண்டில் மட்டும் தென் ஆப்பிரிக்க சுரங்க விபத்துகளில் 49 பேர் உயிரிழந்தனர். இருந்தாலும், 2021-ம் ஆண்டு சுரங்க விபத்துகளில் 74 பேர் உயிரிழந்தனர். கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது விபத்தில் பலியாவோர் எண்ணிக்கை குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# “பயங்கரவாதத்தை சற்றும் பொறுத்துக் கொள்ளாத கொள்கையுடன் அணுகுகிறோம்”

## ஐ.நா.வில் இந்தியப் பிரதிநிதி பேச்சு




**நியூயார்க் : நவ. 30,**

**பயங்கரவாதத்தை சற்றும் பொறுத்துக் கொள்ளாத கொள்கையுடன் அணுகுகிறோம் என ஐ.நா. பொதுச்சபைக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ருச்சிரா காம்போஜ் தெரிவித்துள்ளார்.**

சர்வதேச ஒற்றுமை நாளை ஒட்டி பாலஸ்தீன மக்களுடன் இந்தியா நிற்பதாகக் கூறிய இந்தியப் பிரதிநிதி, இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினைக்கு இந்தியா எப்போதுமே 'இரு நாடுகள்' தீர்வை முன்வைத்து வருகிறது என்றார்.

நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய ருச்சிரா காம்போஜ், ” இஸ்ரேல் - பாலஸ்தீன் இடையே மனிதாபிமான அடிப்படையில் தற்காலிக போர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. உரிய நேரத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மனிதாபிமான உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைய இந்தப் போர் நிறுத்தம் உதவும். இந்தியா இதுவரை 70 டன் அளவிலான மனிதாபிமான அடிப்படையிலான நிவாரண உதவிகளையும் 16.5 டன் மதிப்பிலான மருந்துகளையும் பாலஸ்தீன மக்களுக்காக அனுப்பியுள்ளது.

இந்தப் போருக்கு வித்திட்டது அக்டோபர் 7ல் நடத்தப்பட்ட திடீர் தாக்குதல் தான் என்பதை நாங்கள் அறிந்துள்ளோம். அந்தத் தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். பயங்கரவாதம், பிணைக் கைதிகளாக அப்பாவிப் பொதுமக்களைப் பிடித்துச் செல்லுதல் போன்ற செயல்களை எதைக் கொண்டும் நியாயப்படுத்த இயலாது. ஹமாஸ் குழுவினரால் பிடித்துச் செல்லப்பட்ட பிணைக் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதையே நாங்கள் எதிர்பார்க்கிறோம். அதனால் எந்தவித நிபந்தனையுமின்றி பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது.

பிரதமர் மோடியும், வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரும் இவ்விவகாரத்தில் பல்வேறு உலகத் தலைவர்களுடன் தொடர்ந்து ஆலோசித்து வருகின்றனர். போர் தீவிரமடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும், மனிதாபிமான உதவிகள் மறுக்கப்படக் கூடாது, அமைதியும், ஸ்திரத்தன்மையும் விரைவில் மீட்டெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். பேச்சுவார்த்தை மூலமாக பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அதுவும் பேச்சுவார்த்தை மூலம் 'இரு நாடு தீர்வை' நோக்கி நகருமாறு இஸ்ரேல், பாலஸ்தீனுக்கு வலியுறுத்தி வருகிறது. இரு நாடு தீர்வு மட்டுமே சுதந்திரமான, இறையான்மை பொருந்திய பிராந்தியத்தை உருவாக்கும். வரையறுக்கப்பட்ட எல்லைகள் நீடித்த அமைதிக்கு வழிவகுக்கும்.

இந்தியா எப்போதுமே பாலஸ்தீனத்துடன் இருநாட்டு நல்லுறவைப் பேணும். சுகாதாரம், கல்வி, பெண்கள் அதிகாரத்தை உறுதிசெய்தல் ஆகியவற்றில் இணைந்திருக்கும். இஸ்ரேல் - பாலஸ்தீன் பிரச்சினைக்கு அமைதியின் வழியில் நிரந்தரத் தீர்வு என்பதே இலக்கு” என்றார்.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் கடந்த அக்டோபர் 7 ஆம் தேதி முதல் நடந்து வருகிறது. இதில் காசாவில் இதுவரை 15000க்கும் அதிகாமானோர் உயிரிழந்துள்ளனர். இஸ்ரேல் தரப்பிலும் 1200க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இப்போது தற்காலிகப் போர் நிறுத்தம் 5வது நாளை எட்டியுள்ளது. இருதரப்பிலும் பிணைக் கைதிகள் பரிமாறிக் கொள்ளப்பட்டு வருகின்றனர். இந்தப் போர் நிறுத்தம் மேலும் நீட்டிக்கப்பட்ட கத்தார், எகிப்து நாடுகள் மத்தியஸ்தம் செய்து வருகின்றன. அமெரிக்காவும் இஸ்ரேல் - ஹமாஸ் ‘இரு நாட்டு’ தீர்வை நோக்கி நகர வேண்டும் என்றும் அதற்கும் அமெரிக்கா துணையாக இருக்கும் என்றும் உறுதி அளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவுக்கு படையெடுக்கும் இந்திய மாணவர்கள்

## தூதரகம் வெளியிட்ட சாதனை தகவல்



**புதுடில்லி : நவ. 30,**

**இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரகம் கடந்த ஆண்டு அக்டோபர் முதல் இந்த ஆண்டு செப்டம்பர் வரையிலான ஓராண்டில் 1 லட்சத்து 40 ஆயிரம் மாணவர் விசாக்களை வழங்கியுள்ளது. இதுவரை வழங்கப்பட்ட மாணவர் விசாக்களில் ஓராண்டில் இதுவே அதிகபட்ச சாதனையாக பதிவாகியுள்ளது.**

இதுதொடர்பாக அமெரிக்க தூதரக அலுவலகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள தகவலில்,”இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரக அலுவலகம் இதுவரை இல்லாத வகையில் அதிகபட்சமாக 1 லட்சத்து 40 ஆயிரம் மாணவர் விசாக்களை வழங்கியுள்ளது. கடந்த 2022 அக்டோபர் முதல் 2023 செப்டம்பர் (2023 கூட்டாட்சி ஆண்டு), காலக்கட்டத்தில் சுற்றுலா, மருத்துவம், வணிகம் போன்ற பிரிவுகளில் தற்காலிக அடிப்படையில் உலகம் முழுவதும் 10 மில்லியனுக்கும் அதிகமான விசாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா தூதரகங்களில் பாதிக்கும் மேற்பட்டவற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு தற்காலிக விசா விண்ணப்ப பரிசீலனை நடைபெற்றுள்ளது. 2023 கூட்டாட்சி ஆண்டில் வணிகம் மற்றும் சுற்றுலா விசாக்கள் மட்டுமே 8 மில்லியனுக்கும் அதிகமாக வழங்கப்பட்டுள்ளன.

இது கடந்த 2015-ம் ஆண்டிலிருந்து எந்த கூட்டாட்சி ஆண்டிலும் இல்லாத அதிகபட்சமாகும். அதேபோல், மாணவர் விசாக்கள் மட்டும் 6 லட்சத்துக்கும் அதிகமாக வழங்கப்பட்டுள்ளன. இது கடந்த 2017-லிருந்து எந்த ஆண்டிலும் இல்லாத அதிகபட்சமாகும்.

அமெரிக்காவுக்கு அடிக்கடி வருபவர்களில் தேசிய பாதுகாப்பு நெறிமுறைகளைத் தீவிரமாக பின்பற்றுபவர்கள், தூதரகத்துக்கு நேரில் சென்று விசா பெறும் நடைமுறையில் தளர்வு போன்ற புதுமையான தீர்வுகள் மூலம் இத்தகைய சாதனையை நிகழ்த்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 1.2 மில்லியன் இந்தியர்கள் அமெரிக்காவுக்கு பயணம் செய்துள்ளனர். அமெரிக்காவுக்கு அதிகமாக வந்து செல்லும் உலக நாட்டினரில் இது குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கையாகும்” என குறிப்பிடப்பட்டுள்ளது.

# கடலில் விழுந்து நொறுங்கிய அமெரிக்க ராணுவ விமானம் 8 பேரை தேடும் பணி தீவிரம்



**அமெரிக்கா : நவ. 30,**

**எட்டுபேரை ஏற்றிச்சென்ற அமெரிக்க ராணுவத்தின் ஆஸ்ப்ரே விமானம் நேற்று தெற்கு ஜப்பான் கடலில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. இதுகுறித்து தகவல் அறிந்த ஜப்பானிய கடலோரக் காவல்படை தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்காக விபத்து நடந்த இடத்திற்குச் சென்றுள்ளது.**

அமெரிக்க ராணுவத்தின் டில்ட்ரோட்டர் விமானமான ஆஸ்ப்ரே ஹெலிகாப்டராகவும், டர்போபிராப் விமானமாகவும் செயல்படக்கூடியது. இதில் 8 பேர் பயணித்ததாக தெரியவந்துள்ளது. விமானத்தில் இருந்தவர்களுக்கு என்ன ஆனது என்பது பற்றிய விவரங்கள் குறித்து உடனடியாகத் தெரியவில்லை என்று கடலோர காவல்படை செய்தித்தொடர்பாளர் கசுவோ ஒகாவா தெரிவித்தார்.

தெற்கு பிரதான தீவான கியூஷூவில் உள்ள ககோஷிமாவுக்கு தெற்கே உள்ள யாகுஷிமா தீவில் விபத்துக்குள்ளான இடத்திற்கு அருகே கடலோர காவல்படைக்கு ஒரு மீன்பிடி படகில் இருந்து அவசர அழைப்பு வந்ததாகவும் அவர் கூறினார். ஆஸ்ப்ரே எந்த அமெரிக்கத் தளத்தைச் சேர்ந்தது என்பது குறித்தும் ஆனால் அந்த விமானம் இவாகுனியில் இருந்து ஒகினாவாவுக்குச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

# உக்ரைன் உளவுப்பிரிவு தலைவரின் மனைவிக்கு விஷம் கொடுக்கப்பட்டதாக தகவல்



**உக்ரைன் : நவ. 30,**

**ரஷியா - உக்ரைன் இடையேயான போர் 1¾ ஆண்டுகளாக நீடித்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் உக்ரைனின் உளவுப்பிரிவு தலைவரின் மனைவிக்கு விஷம் கொடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.**

உக்ரைனின் உளவுப் பிரிவு தலைவர் கைரிலோ புடானோ மனைவி மரியானா. இந்த நிலையில் மரியானாவுக்கு கடுமையான உடல்நல பாதிப்பு ஏற்பட்டது. இதையடுத்து அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். பரிசோதனையில் அவரது உடலில் விஷம் கலந்து இருப்பது தெரியவந்தது. அவருக்கு உணவு மூலம் விஷம் கொடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

மரியானாவுக்கு விஷம் கொடுக்கப்பட்ட பின்னணியில் யார் இருக்கிறார்கள்? எப்போது விஷம் கொடுக்கப்பட்டது போன்ற தகவல்கள் வெளியிடப்படவில்லை. ரஷியாவுக்கு எதிரான போரில் உக்ரைன் உளவுப் பிரிவு தலைவர் கைரிலோ புடானோ முக்கிய நபராக உள்ளார். ரஷியாவை தாக்கும் முயற்சிகளுக்கு மூளையாக செயல்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனை தாக்கிய பனிப்புயலில்

## 10 பேர் உயிரிழப்பு – இயல்பு வாழ்க்கை முடக்கம்



**கீவ் : நவ. 30,**

**உக்ரைன் நாட்டின் தெற்குப் பகுதியான ஒடேசா ஒப்லாஸ்டை கடுமையானப் பனிப்புயல் தாக்கியதில் 10 பேர் பலியாகியுள்ளதாகவும், இரண்டு குழந்தைகள் உட்பட 23 பேர் காயமடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.**

உலக நாடுகளையே உற்று நோக்க வைத்தது உக்ரைன் - ரஷ்யா போர். சுமார் 21 மாதங்களுக்கும் மேலாக ரஷ்யா, உக்ரைன் மீது கொடூரத் தாக்குதல்கள் நடத்தி வருகிறது. இதனால் கீவ் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் கடுமையான பாதிப்பை சந்தித்து வருகின்றன. இந்த நிலையில், நவம்பர் 26-27 ஆம் தேதிகளில் கடுமையான புயல், காற்று, மழை மற்றும் பனிப்பொழிவு உக்ரைனின் பெரும்பகுதியைத் தாக்கியது. இந்த நிலையில், பலத்த வேகத்துடன் பனிக்காற்று வீசியதில் மரங்கள், மின்கம்பங்கள் சாய்ந்துள்ளன. இதனால் பல பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான வீடுகளில் மின்சாரம் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் மக்களின் வாழ்க்கை முறை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது உக்ரைன் நாட்டின் தெற்குப் பகுதியான ஒடேசாவை கடுமையானப் பனிப்புயல் தாக்கியதில் 10 பேர் பலியாகியுள்ளதாகவும், இரண்டு குழந்தைகள் உட்பட 23 பேர் காயமடைந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது. மேலும் இந்த தாக்குதலில் இருந்து 2,500 பேர் மீட்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி, 24 மணிநேரமும் மீட்புப்பணியை மேற்கொண்டதற்காக மீட்புப் பணியாளர்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்தார். மோசமான வானிலையால் உக்ரைனின் 16 பிராந்தியங்களில் உள்ள 2,000-க்கும் மேற்பட்ட நகரங்கள் மற்றும் கிராமங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும், சாலைப் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

## மற்ற பெண்களை பார்த்த கண் இதுதானே

# ஆண் நண்பரின் கண்ணை வெறிநாய்க்கடி ஊசியால் தாக்கிய பெண்



**அமெரிக்கா : நவ. 30,**

**காதலன் காதலியுடன் செல்லும்போது எதேச்சையாக மற்ற பெண்களை பார்ப்பது உண்டு. சிலர் வேண்டுமென்றே பார்ப்பதும் உண்டு. அந்த நேரத்தில் காதலி காதலனை பார்க்கும் ஒரு முறைப்பை நாம் சினிமா படங்களில் பார்த்திருப்போம். சிலசமயங்களில் இதுபோன்ற சம்பவத்தால் அடிதடியும் நடப்பது உண்டு.**

இப்படி ஆண் நண்பர் ஒருவர் மற்ற பெண்களை பார்த்ததால் ஆத்திரம் அடைந்த பெண் ஒருவர், ஆண் நண்பரின் கண்ணில் வெறிநாய்க்கடி ஊசியால் குத்திய சம்பவம் அமெரிக்காவில் நடைபெற்றுள்ளது. அமெரிக்காவின் மியாமி-டேட் கவுன்ட்டியில் சந்த்ரா ஜிமினெஸ் என்ற 44 வயது பெண்மணி ஒருவர் தனது ஆண் நண்பர் ஒருவருடன் கடந்த 8 வருடங்களாக வசித்து வருகிறார். ஆண் நண்பர் அடிக்கடி மற்ற பெண்களை பார்த்ததாக தெரிகிறது.

இதற்கிடையே தாங்கள் வளர்க்கும் நாய்க்கு ஊசி போடுவதற்காக இரண்டு நெறிநாய்க்கடி ஊசிகளை ஆண் நண்பர் வீட்டில் வாங்கி வைத்துள்ளார். மற்ற பெண்களை ஆண் நண்பர் பார்த்து வந்ததால் ஜிமினெஸ்க்கு கடுங்கோபம் வந்துள்ளது. இதனால் ஒரு ஊசியை எடுத்து ஆண் நண்பரின் கண்ணில் குத்திவிட்டு தப்பி ஓடிவிட்டார்.

காயம் அடைந்த அந்த ஆண் நண்பர் காவல்துறைக்கு போன் செய்து உதவி கேட்டுள்ளார். போலீசார் அவர்களது வீட்டிற்கு சென்று, ஆண் நண்பரை காப்பாற்றியதுடன், வீட்டிற்கு வெளியில் நிறுத்தப்பட்டிருந்த காரில் தூங்கிக் கொண்டிருந்த ஜிமினெஸை கைது செய்துள்ளனர். போலீசார் விசாரணையின்போது, ஆண் நண்பரின் கண்ணில் நான் ஊசியால் தாக்கவில்லை என்று குற்றத்தை ஏற்றுக் கொள்ள மறுத்த ஜிமினெஸ், ஆண் நண்பர் தன்னைத்தானே காயப்படுத்திக் கொண்டார் எனத் தெரிவித்துள்ளார்.

# நாதஸ்வரம் வாசிக்கும் அரசு பள்ளி மாணவி கலைத்திருவிழா போட்டியில் வென்று மாநில அளவில் சாதனை

ஜோலார்பேட்டை:நவ,30

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த கசிநாயக்கன்பட்டி பகுதியைச் சேர்ந்த அருள் (வயது42) இவரது மகள் ஜெயமித்ரா (வயது 16). இவர் அதே பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 10-ம் வகுப்பு படித்து வருகிறார்.

இவரது சகோதரி லீனா (வயது 13) அதே பகுதியில் 8 ம் வகுப்பு படித்து வருகிறார் இவரது தம்பி மெதுஷ் (வயது 12) இவர் அதே பகுதியில் தனியார் பள்ளியில் 6 ம் வகுப்பு படித்து வருகிறார். இந்நிலையில் ஜெயமித்ரா வீட்டில் தனது தந்தை மற்றும் தாத்தா ஆகியோர் நாதஸ்வரம் வாசிக்கும்போது அதனை பார்த்து கொண்டிருப்பார். அவருக்கு நாதஸ்வரம் எப்படியாவது கற்றுக்கொள்ள வேண்டும்என ஆசை ஏற்பட்டது.



இதனால் தனது பெற்றோரிடம்நாதஸ்வரம்வாசிக்க கற்றுக்கொள்ள வேண்டும் என கேட்டார். ஆரம்பத்தில் மறுத்த அவர்கள் பின்பு கற்றுக்கொடுக்க தொடங்கினர். இதனால் கடந்த 2017-ம் ஆண்டு முதல் நாதஸ்வரம் கற்றுக்கொள்ள பயிற்சி எடுத்தார். அதன் பிறகு 2019 ம் ஆண்டு கொரோனா தொற்று காலத்தில் 2 ஆண்டுகளாக பள்ளிகள் திறக்காததால் வீட்டில் முழு மூச்சுடன் நாதஸ்வரம் கற்றுக்கொண்டார் சிறப்பாக வாசித்தார்.

கோவில் திருவிழா, கும்பாபிஷேகம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். தற்போது 10 ம் வகுப்பு படித்து வருவதால் தன்னுடைய கவனத்தை படிப்பில் செலுத்தினார். அப்போது தான் தமிழக முழுவதும் உள்ள அரசு பள்ளிகளில் பள்ளி மாணவ-மாணவிகள் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இதனால் ஜெயமித்ரா நாதஸ்வரம் வாசிக்கும் நிகழ்ச்சியில் ஆர்வம் காட்டினார்.

இந்த நிலையில் கச்சிநாயக்கன்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் குழந்தைசாமியின் சீரிய முயற்சியில் அப்பள்ளியின் மாணவி ஜெயமித்ரா சென்னை மேலப்பாக்கம் பகுதியில் கடந்த 21-ந்தேதி மாநில அளவில் நடைபெற்ற கலை திருவிழாவில் நாதஸ்வர போட்டியில் கலந்துகொண்டார். இதில் வெற்றி பெற்று 2-ம் இடம் பெற்று சாதனை படைத்தார். இதன் காரணமாக பள்ளி வளாகத்தில் பள்ளியின் மாணவர்களின் முன்னிலையில் நாதஸ்வர போட்டியில் வெற்றி பெற்ற பள்ளி மாணவியை ஊக்குவிக்கும் வகையில் ஊக்கத்தொகை மற்றும் பரிசுகள் வழங்கி கவுரவித்தனர்.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு

# 2 புதிய வால்வோ பேருந்துகளை தொடங்கி வைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



சென்னை : நவ. 30, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு வழங்கப்பட்ட புதிய வால்வோ பேருந்துகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்துதொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் சார்பில் சுற்றுலாத் துறையின் மேம்பாட்டிற்காகவும், அதேபோன்று சுற்றுலா பிரியர்களுக்கு தரமான சேவைகளை வழங்குவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே 14 சுற்றுலா பேருந்துகள் பயான்பட்டில் உள்ளன.

இதன் தொடர்ச்சியாக தற்போது சுற்றுலா பயன்பாட்டிற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் ரூ.2.92 கோடி மதிப்பில் 2 புதிய வால்வோ சொகுசுப் பேருந்துகளை சென்னையில் ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடந்த நிகழ்ச்சியில் கொடியசைத்து தொடங்கிவைத்துள்ளார். இந்த பேருந்தில் அரசு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 58 மாணவர்கள் நேற்று மாமல்லபுரத்துக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்டனர். இந்நிலையில்,முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாணவர்களை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

### தீரன் சின்னமலை பெயரை சொன்னாலே உணர்ச்சியும் எழுச்சியும் வருகிறது

# திருப்பூர் மகளிர் கல்லூரி புதிய கட்டட திறப்பு நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரை

சென்னை : நவ. 30, தீரன் சின்னமலை பெயரை சொன்னாலே உணர்ச்சியும் எழுச்சியும் வருகிறது என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



உடல்நிலையை கருத்தில் கொண்டு காணொலிக்காட்சி மூலம் கல்லூரி கட்டடத்தை திறந்து வைத்துள்ளேன். திருப்பூர் வஞ்சிபாளையம் தீரன் சின்னமலை மகளிர் கல்லூரி புதிய கட்டடத்தை திறந்து வைத்து முதல்வர் பேசியதாவது, திமுக ஆட்சியில் தான் திருப்பூருக்கு 2 பெண்கள் கல்லூரி தொடங்கப்பட்டது என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் பகுதியில் உள்ள பெண்களுக்கான கல்லூரியாக இன்று மாறியுள்ளது. கொங்கு வேளாளர் சமுதாயத்தை பிற்படுத்தப்பட்டோர் சமுதாயமாக அறிவித்தவர் கலைஞர். தீரன் சின்னமலை பெயரை சொன்னாலே உணர்ச்சியும் எழுச்சியும் வருகிறது. திமுக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கல்லூரி கட்ட ஏற்பாடு செய்து கட்டி முடிக்கப்பட்டது. தமிழ்நாட்டு மாணவர்கள் உலகமெல்லாம் போய் சாதிக்க வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

# ஜெயிலில் மது அருந்திய சிறைக்காவலர் சமூக வலைதளத்தில் பரவும் வீடியோ

திருப்பத்தூர்,நவ,30

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி கச்சேரி சாலையில் உள்ள அரசினர் தோட்டத்தில் கிளை ஜெயில் உள்ளது.பல்வேறு குற்ற சம்பவங்களில் ஈடுபட்ட 50-க்கும் மேற்பட்டோர் இந்த கிளை ஜெயிலில் அடைக்கப்பட்டுள்ளனர்.



இங்கு பணியாற்றும் சிறை காவலர் ஒருவர் பணியில் இருக்கும் போது மது அருந்துவதும், புகைப்பிடிப்பதும் போன்ற செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும், மேலும் மது அருந்திவிட்டு ஜெயிலில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளை தொந்தரவு செய்வதாகவும், அவர்களை பார்க்கவரும் உறவினர்களிடம் பணம் பெறுவதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் அவர் மது அருந்தும் வீடியோ மற்றும் புகைப்படங்கள் தற்போது சமூக வலைதளங்களில் பரவி வைரலாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

சிறைக் காவலர் இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க கோரி சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

### ஆபாச வீடியோ சர்ச்சையில் சிக்கிய

# கே.டி.ராகவனுக்கு முக்கிய பொறுப்பு அண்ணாமலை அறிவிப்பால் சலசலப்பு

சென்னை:நவ.30, பல்வேறு சர்ச்சைகள் காரணமாக நேரடி அரசியல் களத்தில் இருந்து ஒதுங்கியிருந்த கே.டி. ராகவனுக்கு காஞ்சிபுரம் மக்களவை தேர்தல் பொறுப்பாளராக நியமனம் செய்து தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

தமிழக பாஜகவின் தொலைக்காட்சி முகங்களில் ஒருவராக இருந்தவர் கே.டி. ராகவன். பாஜகவில் கிடுகிடுவென உயர்ந்து மாநில பொதுச்செயலாளர் பதவியை பிடித்தார். தமிழக பாஜக தலைவர் பதவி குறித்த விவாதங்கள் வரும் போது கே.டி. ராகவன் பெயரும் தவறாமல் அடிபடும் அந்த அளவிற்கு செல்வாக்குடன் இருந்தார்.

2021-ம் ஆண்டு ஆபாச வீடியோ சர்ச்சையில் கே.டி. ராகவன் சிக்க அத்தனையும் தலைகீழாகப் போனது. இந்த ஆபாச வீடியோ சர்ச்சையால் பாஜக பொதுச்செயலாளர் பதவியில் இருந்து விலகினார். பின்னர் ஒட்டுமொத்தமாக தீவிர அரசியலில் ஈடுபடாமல் ஒதுங்கியே இருந்தார். பின்னர் கே.டி.ராகவன் உடல்நலன் பாதிக்கப்பட்ட போது அண்ணாமலை உள்ளிட்டோர் நேரில் சென்று நலம்



விசாரித்தனர்.

கே.டி.ராகவன் நடத்திய புதுமனை புகுவிழாவுக்கும் பாஜக தலைவர்கள் நேரில் சென்று வாழ்த்தினர். இருந்தாலும் தீவிர அரசியல் பக்கம் களப் பணிகளில் நேரடியாக ஈடுபடாமல் இருந்தார் கே.டி. ராகவன். அதே நேரத்தில் சமூக வலைதளங்களில் அவ்வப்போது சில கருத்துகளையும் பாஜக தலைவர்களின் பதிவுகளையும் பகிர்ந்து வந்தார் கே.டி.ராகவன்.

இந்த நிலையில் 39 மக்களவைத் தொகுதிக்கான பொறுப்பாளர்களை நியமித்து தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை அறிவிப்பு வெளியிட்டார். அதில் காஞ்சிபுரம் மாவட்ட பொறுப்பாளராக கே.டி. ராகவன் நியமிக்கப்படுவதாக தெரிவித்துள்ளார். இது காஞ்சிபுரம் மாவட்ட பாஜகவினரிடையே சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மதுராந்தகம் காந்திநகர் வண்ணான் குளம் மேற்கு கரை பகுதியை அமைத்து தர பொதுமக்கள் கோரிக்கை

மதுராந்தகம்,நவ,30

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகராட்சிக்குட்பட்ட 6-வது வார்டில் உள்ள காந்திநகர் வண்ணான் குளம் நீண்ட நாட்களாக தூர்ந்து போய் இருந்தது.இந்த குளத்தை சீரமைத்து கரைகள் அமைத்து,மீது நடைபாதை அமைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என அப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்தனர்.



அதன்படி, ரூ 90 லட்சம் மதிப்பீட்டில் குளத்தில் தூர்வாரும் பணி மேற்கொண்டு கரைகள் அமைத்து கரைகளின் மீது நடை பாதை அமைத்து பொதுமக்கள் அமரும் வகையில் இருக்கை வசதிகள் ஏற்படுத்த வேண்டும் என நிதி ஒதுக்கி பணிகள் தொடங்கப்பட்டன. குளம் தூர்வாரப்பட்டு கரைகள் பலப்படுத்தப்பட்டன கரைகள் மீது ஃபேவரிட் பிளாக் கற்கள் கொண்டு பதித்து குளத்தின் மூன்று பக்கத்திலும் முழுமையாக பணிகள் முடிக்கப்பட்டன.

குளத்தின் பணிகள் நடந்து கொண்டிருக்கும்போதே 2 முறைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.ஆனால்,குளத்தின் மேற்கு கரை பகுதிகளில் கரை அமைக்காமல் ஃபேவரிட் பிளாக் கற்கல் கரைமேல் பதிக்காமலும் மற்றும் குளத்தின் கரை பகுதிகளில் கம்பி வேலி அமைக்காமலும் உள்ளது.

மேலும் மேற்கு கரை பகுதியில்பார்வையாளர் அமர்ந்து பார்ப்பதற்கான இருக்கைகள் மட்டும் அமைக்கப்பட்டுள்ளது. குலத்தின் மேற்கு பகுதி முழுமை பெறாததால் அந்த பகுதியில் உள்ள கால்நடைகள் குளத்தின் கரையோரமாக சென்று கொண்டிருக்கும் போது தவறி குளத்தில் விழுகிறது. ஆகவே,வண்ணான் குளத்தின் மேற்கு கரை பகுதியை முழுமையாக அமைத்து தர வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# உளுந்தூர்பேட்டை அருகே தியாகதுருகம் வட்டார கல்வி அலுவலர் விபத்தில் பலி

கள்ளக்குறிச்சி,நவ,30_

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட விபத்தில் தியாகதுருகம் வட்டார கல்வி அலுவலர் செலின்மேரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்,



இத்தகவலறிந்த எலவனாசூர்கோட்டை காவல் நிலைய காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று விபத்தில் உயிரிழந்தவரின் சடலத்தை கைப்பற்றி உடற்கூறு ஆய்விற்காக கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர், மேலும் உடன் சென்றிருந்த அரசு ஆசிரியைகள் சிறிய காயங்களுடன் உயிர் தப்பிய நிலையில் அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இச்சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்ட பொழுது உளுந்தூர்பேட்டையில் இருந்து கள்ளக்குறிச்சி நோக்கி காரில் சென்று கொண்டிருந்த பொழுது மழையின் காரணமாக கார் நிலைத்தடுமாறி காப்புக் காட்டிற்குள் தாறுமாறாக சென்று ஏற்பட்ட விபத்தில் காரில் சென்ற தியாகதுருகம் வட்டார கல்வி அலுவலர் செலின்மேரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் , உடன் சென்றவெள்ளையூர் அரசு பள்ளி தலைமையாசிரியர் பாபுகென்னடி, ஆசிரியர் பயிற்றுனர் ஜெயந்தி, மற்றும் அலுவலக ஊழியர் கிருபா உள்ளிட்ட மூன்று பேரும் சிறியகாயங்களுடன் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வட்டார கல்வி அலுவலர் தலைமையில் தனியார் பள்ளியில் ஆசிரியர் குழுவினர் ஆய்வுக்குச் சென்றபோது இந்த விபத்து நடைபெற்று உள்ளது, என்பது தெரிய வந்தது, மேலும் இவ்விபத்து குறித்து காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### அரியலூரில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு

# 612 பயனாளிகளுக்கு பட்டாக்களை அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்

அரியலூர்,நவ.30-

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 612 பயனாளிகளுக்கு பட்டாக்களை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழங்கினார்.



இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. முன்னாள் முதலமைச்சர், கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் தொடர்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்டு வருகின்றன. அதன்படி அரியலூர் மாவட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது, அந்த வகையில் அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் 612 பயனாளிகளுக்கு பட்டாக்களை போக்குவரத்துத்துறை அமைச்சர் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு, ரூ.68,750 மதிப்பில் மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, காதொலி கருவிகளும், 06 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையினையும் போக்குவரத்துத் துறை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.ச.கலைவாணி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.இலக்குவன், அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், நகர்மன்றத் துணைத்தலைவர் கலியமூர்த்தி, வாலாஜாநகரம் ஊராட்சி மன்றத்தலைவர் .அபிநயா இளையராஜா, மாவட்ட நிலை அலுவலர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# சீர்காழி அருகே வீடு, கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாமல் அகதிகளை விட மோசமாக வாழும் நரி குறவர் இன மக்கள், தமிழக முதல்வருக்கு கோரிக்கை

சீர்காழி,நவ,30

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா புத்தூர் கடை வீதியில் நரிக்குறவர் என மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.





காலம் காலமாக அதே பகுதியில் வாழ்ந்து வரும் மக்களுக்கு கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த வீடுகள் முற்றிலும் சிதிலமடைந்து மேற்கூறைகள் பெயர்ந்து வந்த நிலையில் பல்வேறு இடங்களில் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் அவர்களுக்கு புதிதாக வீடு கட்டித்தர அதிகாரிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர். அதன்படி ஏற்கனவே சிலைமடைந்த காலனி வீடுகளை அவர்கள் முற்றிலும் இடித்துள்ளனர். ஆனால் அதன் பிறகு நீண்ட நாட்கள் ஆகியும் வீடுகள் கட்டித் தரப்படவில்லை.

அதே நேரத்தில் கோபாலசமுத்திரம் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதி என்பதால் ஊராட்சியை சேர்ந்த அதிகாரிகள், உறுப்பினர்கள் அந்த பகுதியில் இரண்டே இரண்டு வீடுகளை மட்டும் கட்டிக் கொடுத்துள்ளனர். மற்ற 20-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் என்ன செய்வது என்று தெரியாமல் அதே பகுதியில் தார்ப்பாய் மூலம் டென்ட் கொட்டாய்போட்டுதங்கி உள்ளனர். கடுமையான மழை காலம் என்பதால் குழந்தை குட்டிகளுடன் அந்த டென்ட் கொட்டாயில் அவர்களால் வசிக்க முடியவில்லை. காற்றில் தார்பாய்கள் கிழிந்து தொங்குவதாலும் வாழ்வதற்கு இடமின்றி நிற்கதியாய் நிற்கின்றார்கள்.

காலனி விடுகளின் மேற்கூறைகள் பெயர்ந்து விழுந்ததாலும், மழைக்கு பாதுகாப்பாக இருந்ததாக கூறும் அவர்கள் இருந்ததையும் இடித்துவிட்டு எங்களை இல்லாதவர்களாய் மாற்றி விட்டனர் அதிகாரிகள் என்று புலம்புகிறார்கள். அதே நேரத்தில் அப்பகுதியில் உள்ள வாய்க்கால் முற்றிலும் ஆக்கிரமிப்பில் உள்ளதால் வடிகால் வசதியின்றி மழைநீர் வெல்லம்போல் ஓடுவதால் அந்த தண்ணீரும் வீட்டிற்குள் புகுகின்றன. இதனால்கழிவுகள் வீட்டிற்குள் வருவதுடன், பாம்பு போன்ற கொடிய நச்சு உயிரினங்கள் வீட்டிற்குள் நுழைவதால் குழந்தைகளுடன் இருக்கும் தாய்மார்கள் மிகவும் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர்.

இதனால் பாதுகாப்பான இடம்தேடி பஞ்சாயத்து கட்டிடங்கள், சாலையோர கடைகள் என அகதிகளைப்போல் கிடைக்கிற இடங்களில் படுத்து தூங்கும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக புலம்புகின்றனர். அதோடு மட்டுமன்றி இயற்கை உபாதைகளை கழிக்க முடியாமல் பெண்கள் மிகவும் அவதியுருவதாகவும் அதற்காக நீண்ட தூரம் செல்ல வேண்டிய சூழல் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

நாங்கள் பழங்குடியின மக்கள்தான் என்பதற்கான சான்றிதழை அண்மையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவரது கரங்களாலே வழங்கியதாக கூறும் மக்கள், அதற்கான சான்றிதழையும் புகைப்படங்களையும் நம்மிடம் காண்பிக்கின்றனர். இதுவரை எத்தனையோ அதிகாரிகளையும் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களையும் நேரில் சென்று பார்த்து விட்டோம் ஆனால் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காமல் கையில் கொஞ்சம் பணத்தை கொடுத்து எங்களை ஓரங்கட்டுவதற்கு தான் பார்க்கிறார்களே தவிர உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இந்த அரசை, இந்த ஆட்சியை நம்பித்தான் நாங்கள் இருக்கிறோம் என்று வேதனையுடன் கூறும் அந்த மக்கள் எங்களுக்கான அடிப்படை வசதிகளை, எங்களுக்கான வாழ்வாதாரத்தை, எங்களுக்கான விடியலை முதலமைச்சர் அவர்கள்தான் வழங்க வேண்டும் என கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

### திருமண மண்டபத்தை வாடகைக்கு எடுத்து சூதாட்டம்

# மயிலாடுதுறை அருகே வாட்ஸ்-அப் சூதாட்ட கும்பல் சிக்கியது – போலீசார் அதிரடி நடவடிக்கை

மயிலாடுதுறை : நவ. 30, மயிலாடுதுறை அருகே வாட்ஸ்-அப் குழு அமைத்து ஊர் ஊராக சென்று சூதாட்டத்தில் ஈடுபட்ட கும்பல் கைது செய்யப்பட்டனர்.



சூதாட்டம் குறித்து மயிலாடுதுறை மாவட்டம் காவல் அலுவலகத்துக்கு ரகசிய தகவல் ஒன்று கிடைத்துள்ளது. அதன்பேரில் குற்றாலம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட அஞ்சார்வாரத்தலை பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அதிகளவிலான நபர்கள் இணைந்து சூதாட்டம் நடத்தி வருவது தெரியவந்தது. தொடர்ந்து மயிலாடுதுறை டி.எஸ்.பி. சஞ்சீவ்குமார் தலைமையிலானபோலீசார் திருமண மண்டபத்தை சுற்றிவளைத்து உள்ளே சென்று பார்த்துள்ளனர்.

அங்கு திருச்சி, அரியலூர், காரைக்கால், மயிலாடுதுறையைச்சேர்ந்த 20 பேர் சூதாட்டத்தில் பங்கேற்றிருப்பது தெரியவந்தது.உடனடியாக அவர்களை சுற்றிவளைத்து சூதாட்ட கும்பலைச் சேர்ந்த 14பேரை போலீசார் அதிரடியாக கைது செய்தனர். முதற்கட்ட விசாரணையில், குத்தாலம் அருகே அஞ்சார்வாரத்தலை கிராமத்தில் திருமண மண்டபத்தை வாடகைக்கு பிடித்து பணம் வைத்து சூதாட்டம் நடத்தியது தெரியவந்தது.


இந்த கும்பல் வாட்ஸ்-ஆப் குழு அமைத்து ஊர் ஊராக சென்று சூதாட்டம் நடத்தியது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து சூதாட்ட கும்பலிடம் இருந்து ரூ.5.15 லட்சம்ரொக்கம், 3 கார்கள் மற்றும் 16 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. வாட்ஸ்-ஆப் குழு அமைத்து ஊர் ஊராக சென்று சூதாடிய கும்பல் மயிலாடுதுறையில் சிக்கிய சம்பவம்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# தமிழகம்; வெறுப்பு பேச்சு விவகாரத்தில் வழிகாட்டு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனரா?

# தேமுதிக தலைவர் விஜயகாந்த் உடல்நிலை சீராக இல்லை : மியாட் அறிக்கை





# அமைச்சர்கள் கே.என்.நேரு, ரகுபதி, ஐ.பெரியசாமி மீதான சொத்துக்குவிப்பு வழக்கு ரத்து


| சென்னை / புதுக்கோட்டை | 30.11.2023 | varalaruu.com | பக்கம்:7 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

30.11.2023 வியாழன்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஜகதீஷ் சந்திர போஸ் , இந்திய இயற்பியலாளர் (பி.1858) (இ.1937)



கோவைக்கிழார் , தமிழகத் தமிழறிஞர், வழக்குரைஞர் (பி.1888) (இ.1969)



ச. து. சுப்பிரமணிய யோகி , தமிழகத் தமிழறிஞர், கவிஞர் (பி.1904) (இ.1963)



வி. என். ஜானகி , தென்னிந்தியத் திரைப்பட நடிகை, தமிழ்நாட்டின் 5வது முதலமைச்சர் (பி.1923) (இ.1996)



## இன்றைய நினைவு நாள்

டி. ஆர். ராமச்சந்திரன் , தமிழ்த் திரைப்பட நடிகர் (பி.1917) (இ.1990)



மீனாம்பாள் சிவராஜ் , தமிழக சமூகப் போராளி, பெண்ணியவாதி (பி.1904) (இ.1992)



ஐ. கே. குஜரால் , இந்தியாவின் 12வது பிரதமர் (பி.1919) (இ.2012)

